# தமிழினி

## தகவல் களஞ்சியம்

புரட்டாதி 2019
இலங்கை விலை ரூபா 45/-
லண்டன் 75 Pence



SLPP's presidential candidate
Gotabaya Rajapaksa



NPP's presidential candidate
Anura Kumara Dissanayake




Presidential hopeful Sajith Premadasa

# நவம்பர் 17இல் வெற்றி வாகை சூடப் போவது யார்?

# தள்ளாடும் தமிழர் தரப்பு வெற்றியில் பங்கேற்குமா?

## அறிவித்தல்

ஜனவரி 2020ல் நடைபெறவிருந்த உலக தமிழ் ஊடகவியலாளர் மாநாடு தவிர்க்க முடியாத காரணங்களால் ஏப்ரல் 2020ற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



நல்லூர் பிரதேசத்தை புனித பூமியாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற தமிழ்த்தாய் மன்றம் விடுக்கவுள்ள கோரிக்கைக்கு "தமிழினி செய்தி நிறுவனம்" தனது ஆதரவை வழங்குகின்றது.

யாழ்ப்பாணத்தின் இறுதி இராசதானியாக இருந்த நல்லூர் பகுதியையும், சங்கிலியன் தோப்பு, சங்கிலியன் மன்னனின் கோட்டை, யமுனா ஏரி, அரங்கவாசல் போன்றவை காப்பாற்ற வேண்டிய அவசரமும் அவசியமும் ஏற்பட்டுள்ளது.

தற்போதைய இந்து சமய அமைச்சரின் கவனத்திற்கு உடனடியாக இந்தக் கோரிக்கை எடுத்துச் செல்லப்பட வேண்டியுள்ளதால் மாணவர்கள் உங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள படிவங்களைப் பூர்த்தி செய்து தமிழினி அலுவலகத்துக்கு அல்லது தலைமை ஆசிரியரிடம் 18.11.2019ற்கு முன்னர் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

லண்டன்

**வ. மா. குலேந்திரன்**
பிரதம ஆசிரியர்

# "எழுக தமிழ் - 2019" பிரகடனம்

தமிழ் மக்களுக்கான தீர்வை வலியுறுத்தியும், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தும் வகையிலும் யாழில், எழுக தமிழ் பேரணி நடைபெற்றது.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் 16.09.2019 காலை நல்லூர் மற்றும் யாழ். பல்கலைக்கழக முன்றலில் இருந்து ஆரம்பமான பேரணி யாழ். கோட்டைக்கு அருகில் உள்ள முற்றவெளியை சென்றடைந்தது.

அங்கு எழுக தமிழ் கூட்டம் நடைபெற்று, பிரகடனம் வாசிக்கப் பட்டது.

தமிழர் தாயகத்தில் சிங்கள குடியேற்றத்தை நிறுத்து, போர்க்குற்ற வாளிகளை சர்வதேச நீதிமன்றில் நிறுத்து, எல்லா அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வர்கள் தொடர்பில் பக்க சார்பற்ற சர்வதேச விசாரணைகளை முன்னெடு, தமிழர் தாயக நிலப்பரப்பில் இராணுவ மயமாக்கலை நிறுத்து, போரினால் இடம்பெயர்ந்தவர்களை சொந்த இடங்களில் மீள் குடியேற்று உள்ளிட்ட ஆறு பிரதான கோரிக்கைகளை முன் வைத்து குறித்த எழுக தமிழ் நடத்தப்பட்டது.

எழுக தமிழ் பிரகடனம் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் வாசித்தார்.




4966-Thamilini Thagaval-1

## பிரகடனத்தின் முழுமையான விபரம் வருமாறு:

பல்லாயிரக்கணக்கில் இங்கே வருகை தந்துள்ள அனைத்து உறவுகளுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளை முதற்கண் கூறி வைக்கின்றோம். "அழுத குழந்தையே பால் குடிக்கும்" என்பார்கள். குழந்தை அழுதால்தான் தாய்க்கு அதன்பசி பற்றி பொதுவாக நினைவுவரும்.

"அழுதால் உன்னைப் பெறலாமே" என்றார் மணிவாசகப் பெருமான். இறைவன் கூட அழுபவர்களுக்கே வரம் கொடுக்கின்றான் போலும். நாம் இன்று எமது அழுகைகளின் காரணங்களை அரசாங்கத்திற்கும் அனைத்து ஐக்கிய நாடுகள் சபை அங்கத்துவ நாடுகளுக்கும் உரக்கச் சொல்லவே இங்கு கூடியுள்ளோம். இன்று நாம் அழமாட்டோம். ஆனால் ஆர்ப்பரிப்போம். அகிலத்தை எம் பக்கம் ஈர்க்க வைப்போம்.

நான் இங்கு தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் என்ற முறையில் பேசுகின்றேன். என் கட்சி சார்பில் பேச எவரும் அழைக்கப்பட மாட்டார்கள். உங்கள் பலரின் வேண்டுகோளுக்கு அமைய நானும் உங்கள் மத்தியில் இருந்து பேச அழைக்கப்பட்டுள்ளேன்.

இலங்கையின் வரலாற்றுக் காலத்திற்கு முதலிலிருந்தே தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆண்டு வந்து கொண்டிருந்த நிலைமை 16ஆம் நூற்றாண்டில் காலணியாதிக்கம் ஏற்படும் வரை நீடித்திருந்தது. பின்னர் சுமார் 450 வருட காலம் வெளிநாட்டவரின் காலணி ஆட்சி நடைபெற்றது. 1948ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் கிடைத்தபோது ஒற்றையாட்சி நிர்வாக அலகின் கீழ் தமிழ் மக்களின் ஆட்சி அதிகாரங்கள் பறிபோயிருந்தன. இது சுதந்திரத்துக்கு முற்பட்ட வரலாறு.

பின்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் எமது பிரச்சினைகளை நாமே தீர்க்கும் எமது பிரதேசங்களை நாமே அபிவிருத்தி செய்யும் எமது பாதுகாப்பை நாமே உறுதிசெய்யும் அதிகாரம் அற்ற எமது நிலைமையைப் பயன்படுத்தி எமது இனத்தை "இன அழிப்புக்கு" உட்படுத்தி எமது தாயகமான வடக்கு கிழக்கை ஆக்கிரமித்து தமிழ்தேசியத்தை அழிக்கும் பல்வேறுபட்ட உபாயங்களை சட்டங்களை பயன்படுத்தியும் சட்டத்துக்கு புறம்பாகவும் மேற்கொண்டார்கள். அவற்றுக்கு எதிராக தமிழ் மக்கள் சுமார் 30 வருட காலம் அகிம்சை வழியிலும் வேறு வழியின்றி மேலும் ஒரு 30 வருடகாலம் ஆயுத வழியிலும் போராடியமை சுதந்திரத்துக்குப் பிற்பட்ட வரலாறு.

இனவழிப்பு பற்றிய ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையானது 09.12.1948லேயே இன அழிப்புக்கு வரையறை கொடுத்திருந்தது. அதனை இலங்கை 1950ல் ஏற்றுக் கொண்டிருந்தது.

## அவையாவன:

1. ஒரு மக்கட் கூட்டத்தின் உறுப்பினர்களைக் கொல்லுதல்.

2. ஒரு மக்கட் கூட்டத்தின் உறுப்பினர்களுக்கு மிக அபாயகரமான உடல் மற்றும் மனோரீதியான பாதிப்பை ஏற்படுத்துதல்.

3. வேண்டுமென்றே ஒரு மக்கட் கூட்ட உறுப்பினரின் பகுதியானதோ முழுமையானதோ பௌதிக அழிவைக் கொண்டுவரும் நடவடிக்கைகளில் ஈடுபடல்.

4. ஒரு மக்கட் கூட்டத்தினுள் பிள்ளைகள் பிறக்காது செய்ய நடவடிக்கைகளில் ஈடுபடல். இனப்பெருக்க ஆற்றலை நீக்குவது இவற்றுள் ஒன்று.


5. ஒரு மக்கட் கூட்ட குழந்தைகளை இன்னொரு மக்கட் கூட்டத்திற்கு பலாத்காரமாக மாற்றுதல் ஆகியனவே அவை.

ஆகவே இன அழிப்பு என்பது வெறும் கொல்லுதலைக் குறிக்கமாட்டாது. உடல், மனோரீதியான பாதிப்பு, பௌதீக அழிப்பு, இனப்பெருக்க ஆற்றலை பலாத்காரமாக நீக்குதல், குழந்தைகளைப் பலாத்காரமாக தமது குடும்பங்களில் இருந்து மாற்றுதல் போன்ற பலவும் இன அழிப்பே.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்ததற்கும் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைவதற்கும் இடைப்பட்ட காலத்தில் எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வடிவங்களிலான இன அழிப்பு நடவடிக்கைகள் மூலம் பெரும் அளவில் எமது பாரம்பரிய நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

சிங்களக் குடியேற்றங்கள் மூலம் வடக்கு கிழக்கின் குடிசன பரம்பலில் திட்டமிட்ட மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக் கான எமது மக்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். ஆயிரக்கணக்கான எமது பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். எமது பாரம்பரிய வரலாற்று தொல்லியல் கலாசார சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இலட்சணக்கான எமது மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்கின்றார்கள். பெருமளவில் எமது சொத்துக்கள் அழிக்கப்பட்டு பொருளாதாரம் சிதைக்கப்பட்டுள்ளது.




காலத்துக்கு காலம் ஏற்பட்ட வெளிநாட்டு தலையீடுகளாலோ, சமரச முயற்சிகளாலோ மனித குலத்துக்கு எதிரான இந்தக் குற்றங்களைத் தடுக்க முடியவில்லை. உலகின் கண்களுக்கு முன்பாக கொடூரமானதொரு சாட்சிகளில்லா சமர் நடத்தப்பட்டு மனித துன்பியல் நிகழ்வொன்று நிகழ்த்தப்பட்டு 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னணியில் இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள் தொடர்பில் இலங்கை சர்வதேச ரீதியான ஒரு பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் எமக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகள் இங்கு தொடர்கின்றன. வடக்கு கிழக்கில் எமது இனத்தின் இருப்பையும் அடையாளத்தையும் இல்லாமல் செய்யும் இன அழிப்பு நடவடிக்கை களுக்கு இராணுவம், வன இலாகா, வன ஜீவராசிகள் திணைக்களம், வீடமைப்பு அதிகார சபை, மகாவலி அதிகார சபை, தொல்பொருள் ஆய்வுத்திணைக்களம் போன்ற "அரச இயந்திரத்தை" இன்று அரசாங்கம் முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றது.

அரசாங்கம் தனது எல்லா திணைக்களங்களையும் அதிகார சபைகளையும் மிகவும் நுட்பமான முறையில் எமக்கெதிராகப் பயன் படுத்தி வருகின்றது. இந்த அநியாயங்களையும் அடக்குமுறைகளையும் நாம் இனியும் அனுமதிக்க முடியாது. அவ்வாறான அரச நடவடிக் கைகளுக்கு நாங்கள் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என்று கூறியே இன்றைய "எழுக தமிழ்" நிகழ்வில் நாம் கிளர்ந்து நிற்கின்றோம்.

நாம் இன்று யாழ் முற்றவெளியில் திரண்டு இருந்து உரிமைக்குரல் எழுப்பும் அதேவேளை எமது புலம் பெயர் உறவுகள் பல்வேறு நாடுகளிலும் சாமாந்திரமாக "எழுக தமிழ்" போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். எமது தமிழ்நாட்டு உறவுகள் எமது போராட்டங் களுக்கு தமது ஆதரவை வெளிப்படையாகத் தெரியப்படுத்தி வருகின்

றார்கள். தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு இணைந்த தமது தாயகத்தில் சுய நிர்ணய உரிமையுடன் வாழும் வகையில் இந்தியா தீர்வு ஒன்றினை கொண்டுவரும் என்று எமது மக்கள் திடமாக நம்புகின்றார்கள்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியா இதுவரை கடைப்பிடித்து வரும் மென்போக்கு நிலையில் இருந்து விலகி தமிழ் மக்களின் இருப்பையும் அடையாளத்தையும் பாதுகாக்கும் வகையில் துணிச்சலான நடவடிக்கைகளைத் தாமதம் இன்றி எடுக்க வேண்டும் என்று இந்த "எழுக தமிழ்" மூலம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தமது உரிமைகளை வலியுறுத்தி எமது மக்கள் மேற்கொள்ளும் இந்த போராட்டத்தின் முக்கியத்துவத்தை எவரும் குறைத்து மதிப்பிடவோ அல்லது புறந்தள்ளிவிடவோ முடியாது. எமது கோரிக்கைகள் யாவையென இங்கு இணைத்தலைவரால் வாசிக்கப்பட்டன.

ஆறு விடயங்களுக்கு மேலதிகமான இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டமாக அமைய வேண்டும். அடுத்து எமது பகுதிகளில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு தென் இலங்கையில் இருப்பவர்களை தயவு செய்து நியமிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

யுத்தத்தினால் சின்னாபின்னமாகிப் போயுள்ள எமது பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்பி நாமும் உங்களைப்போன்று வளமான ஒரு வாழ்வில் ஈடுபடும் வகையில் ஒரு இடைக்கால விசேட பொருளாதார கட்டமைப்பை சர்வதேச நாடுகளுடன் சேர்ந்து உருவாக்குங்கள் என்றும் மத்திய அரசாங்கங்களிடம் கேட்கின்றோம். எம்மை நாமே ஆட்சிசெய்து சுய கௌரவத்துடன் வாழ்வதற்கு எமக்கு இருக்கும் சுய நிர்ணய உரிமையினை ஏற்றுக் கொள்ளுங்கள். அங்கீகரியுங்கள் என்று எமது சிங்கள, முஸ்லிம் சகோதரர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். எமது மக்கள் என்ன தீர்வினை விரும்புகின்றார்கள் என்பதை அவர்களின் கருத்தை அறியும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை எமது மக்கள் மத்தியில் நடத்தி முடிவு செய்யுங்கள் என்று அரசாங்கத்தை கேட்டு வைக்கின்றோம். சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இந்த நாட்டில் காலம் காலமாக உள்ளூர் சுதேச மக்களாக வாழ்ந்து வருபவர்கள். எமது சகோதர இனமான உங்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் நாம் என்றைக்கும் தடையாக இருந்ததில்லை. நீங்களும் வாழவேண்டும் நாமும் வாழ வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம். நீங்கள் தற்போது எமக்கு எதிராக மேற்கொண்டு வரும் எல்லா செயற்பாடுகளையும் நிறுத்தி எமது சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

அதேவேளை சர்வதேச சமூகத்தில் நாம் வேண்டிக்கொள்வது யாதெனில் உலகத்தின் மூத்த இனங்களில் ஒன்றான எமது தமிழ் இனத்தின் இருப்பும் அடையாளமும் இலங்கைத் தீவில் பல தசாப்த காலஇன முரண்பாடு காரணமாக இல்லாமல் போகும் நிலைமை ஏற்பட்டிருப்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளுங்கள். ஆகவே தயவு செய்து சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், கோட்பாடுகள் மற்றும் உடன்படிக்கைகளின் அடிப்படையில் உங்களுக்கு இருக்கும் தார்மீக கடப்பாட்டை உணர்ந்து செயற்படுங்கள் என்று நாம் உங்களிடம் கோருகின்றோம்.

இறுதி யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபையினூடாக ஒரு பொறுப்பு கூறல் பொறிமுறைக்கு உட்படுத்த சர்வதேச நாடுகள் மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வி கண்டுவிட்டன. நல்லெண்ண அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீது விதித்திருந்த ஜீ.எஸ்.பி. வரிச் சலுகையை நீக்கியமை எந்தவிதத்திலும் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை அரசாங்கத்தை மாற்றவில்லை என்பதை உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இறுதி யுத்தத்தில் மிகமோசமான போர்க்குற்றம் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்ததாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளால் குற்றம் சுமத்தப்பட்டுள்ள லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவை இலங்கை இராணுவத்தின் தளபதியாக நியமித்துள்ளமை எந்த அளவுக்கு இலங்கை உலக அபிப்பிராயங்களை கணக்கில் எடுக்கின்றது என்பதை எடுத்தியம்பும். அரசாங்கம் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றி தமிழ் மக்களையும் ஏமாற்றி இன அழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. எந்த அளவுக்கு நாம் எமது மக்களையும் நிலங்களையும் பொருளாதாரத்தையும் இழந்திருக்கின்றோம் இழந்து வருகின்றோம் என்பதை நாம் நன்கு உணர்ந்தவர்களாகவே சர்வதேச நாடுகளின் உடனடியான தலையீட்டை இந்த "எழுக தமிழ்" நிகழ்வின் ஊடாகக்கோரி நிற்கின்றோம். எமது மக்கள் தமது அன்றாட நிகழ்வுகளை எல்லாம் கைவிட்டு வந்து கடைகளை அடைத்து வைத்துவிட்டு வந்து இன்று இந்த "எழுக தமிழ்" நிகழ்வின் ஊடாக மேற்கொள்ளும் சாத்வீக போராட்டத்தின் செய்தியினை புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றோம்.

இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று கையாளுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து சர்வதேச சமூகம் கவனம் செலுத்தவேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக

மேற்கொள்ளப்படும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை ஒரு விசேட பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என்றும் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை கட்டுப் படுத்தும் வகையிலும் கண்காணிக்கும் வகையிலும் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயம் வடக்கு கிழக்கில் தனது அலுவலகங் களை திறக்க வேண்டும் என்று இந்த "எழுக தமிழ்" நிகழ்வின் மூலம் நாம் கோரிக்கை விடுக்கின்றோம். இலங்கை தீவில் ஒரு நிலையான சமாதானத் தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பக்கூடிய தீர்வு தொடர்பில் தமிழ் மக்களின் கருத்தை அறியும் வகையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான முயற்சிகளையும் சர்வதேச சமூகம் சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கோட்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ள வேண்டும்.


அரசாங்கத்திற்கு ஒன்றை இறுதியாக கூறிவைக்கின்றோம். தமிழ்ப் பயங்கரவாதிகள் என்று எம்மிடையே எவரும் இல்லை. அரச பயங்கரவாதத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களே எம்மிடையே உள்ளார்கள். எம் மக்களை மத அடிப்படைவாதப் பயங்கரவாதிகள் என்று அடையாளப்படுத்தப்படும் நபர்களுடன் முடிச்சுப் போடாதீர்கள். எமது இளைஞர்கள், யுவதிகள் மற்றோர் யாவரும் எமது விடுதலைக்காகப் போராடினார்கள். அரச பயங்கரவாதத்திற்கு ஈடுகொடுக்க ஆயுதம் ஏந்தியவர்களே எமது மக்கள். அவர்களுக்குப் பயங்கரவாதிகள் என்ற முத்திரை குத்தி அவர்களின் சுதந்திர வேட்கையைக் கொச்சைப்படுத்தி யுள்ளன தொடர்ந்து வந்த மத்திய அரசாங்கங்கள். அவ்வாறு தொடர்ந்து செய்வதைத் தவிருங்கள் என்று அரசாங்கங்களுக்கு கூறி வைக்கின்றேன்.

இளைஞர், யுவதிகள் ஆயுமேந்த காரணகர்த்தாக்களாக இருந்த வர்கள் தொடர்ந்து வந்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களே. இவற்றை எல்லாம் அலசி ஆராய்ந்து உண்மையை எமது சிங்களச் சகோதர சகோதரிகள் அறிந்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. சரித்திரத்தைத் திரித்து உண்மையை மழுங்கடிக்கப்பண்ணி, பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்று எம்மக்கள் மீது அநியாயமாகக் குற்றம் சுமத்தி சட்டத்திற்குப் புறம்பான சட்டங்கள் மூலம் தண்டித்த காலங்களை வெட்கத்துடன் நோக்க வேண்டிய தருணம் தற்போது எமது சிங்கள சகோதர சகோதரிகளுக்கு வந்துள்ளது. இதுவரை காலமும் நடாத்தப்பட்ட பொய் சார்ந்த அரசியல் நடவடிக்கைகளை உணர்ந்து சகோதரர்களாக தமிழ் மக்களுக்கு விடிவு காலம் ஏற்படுத்த எமது சிங்கள சகோதர சகோதரிகள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கின்றேன் என பிரகடனத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள்: சிறப்புத் தபால் தலை வெளியிடும் ரஷ்யா

மகாத்மா காந்தியின் 150ஆவதுபிறந்த நாளையொட்டி, அவரது நினைவாக சிறப்பு அஞ்சல் தலையை வெளியிடவுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் விளாடிவோஸ் டோக் நகரில் கிழக்குப் பொருளாதாரக் கூட்டமைப்பு மாநாடு நேற்று முன்தினம் 4ஆம் திகதி ஆரம்பமானது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்தியப் பிரதமர் மோடியை அழைத்தார். இந்த அழைப்பை ஏற்று மோடி ரஷ்யா சென்றார்.






இந்தச் சந்திப்பில் வர்த்தகம், முதலீடு, எண்ணெய் மற்றும் எரிவாயு, சுரங்கம் அணுசக்தி பாதுகாப்பு, விமானம், கடல்சார் தொடர்பு போக்குவரத்துக் கட்டமைப்பு, உயர் தொழில்நுட்பம் மக்களுக்கு இடையிலான தொடர்பு ஆகியவற்றில் ரஷ்யா - இந்தியா ஆகிய இரு நாடுகளின் உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தப் பட்டது.

இந்தியப் பிரதமர் மோடி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோரின் செய்தியாளர்கள் சந்திப்புக்கு பின்னர் இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் வெங்கடேஷ் ஷர்மா செய்தியாளர்களை சந்தித்தார்.

இதில் அவர் தெரிவிக்கையில், மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த நாளையொட்டி சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட ரஷ்யா அரசு

முடிவு செய்துள்ளது. இதனை தனது செய்தியாளர் சந்திப்பிலும் ஜனாதிபதி புடின் கூறியுள்ளார்.

இந்தியாவின் தேச தந்தை மகாத்மா காந்தியின் பிறந்த நாளன்று அவரை கௌரவப்படுத்தும் ரஷ்யாவுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என மேலும் தெரிவித்தார்.

# ரஷ்யா - சென்னை இடையே விரைவில் கப்பல் போக்குவரத்து -பிரதமர் மோடி தெரிவிப்பு

ரஷ்யாவின் விளாடிவோஸ் டோக் நகரில் இருந்து சென்னைக்கு நேரடியாக முழுநேரக் கப்பல் போக்குவரத்து விரைவில் ஆரம்பிக்கப்படும் எனப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

அரசமுறைப் பயணமாக ரஷ்யா வந்துள்ள பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் விளாடிவோஸ்டோக் நகரில் உள்ள கப்பல் கட்டும் தளத்தை பார்வையிட்டார்.

ஜனாதிபதி புடினுடன் கூட்டாக செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நல்லுறவு இருநாடுகளின் தலைநகரங்களுக்கு மட்டுமான உறவல்ல. இந்த நல்லுறவில் இருநாடுகளைச் சேர்ந்த அனைத்து மக்களும் இணைக்கப் பட்டுள்ளனர் என மேலும் தெரிவித்தார்.




4966-Thamilini Thagaval-2

# 19ஆவது திருத்தத்தில் பிரதமருக்கே அதிகாரம் 2020 பொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி ஆட்சி அமைக்கும் - ஜனாதிபதி மைத்திரிபால

ஜனாதிபதி தேர்தலைவிட பொதுத்தேர்தல் தொடர்பாகவே தாம் கவனம் செலுத்தி வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


19ஆவது அரசியல் திருத்தத்தினால் ஜனாதிபதிக்கு அதிகாரம் குறைவாகவே இருக்கும். எனவே ஜனாதிபதி வேட்பாளரைவிட பிரதமர் வேட்பாளர் பலம் வாய்ந்தவராக இருக்கவேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆவது வருடாந்த மாநாடு கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இது குறித்து கலந்து கொண்டு தெரிவிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் கட்சியிலிருந்து வேறு கட்சிக்குத்தாவும் சிலர் நாட்டைப் பற்றி சிந்திப்பதில்லை. மாறாக அவர்கள் தங்கள் சொந்த இலாபங்களைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறார்கள்.

எனவே இவ்வாறு கட்சி தாவும் உறுப்பினர்கள் தொடர்பாக மக்களே முடிவினை எடுக்க வேண்டும். நாட்டின் நலனுக்காக அல்லது மக்களுக்காக எத்தனை பேர் அரசியலில் ஈடுபடுகிறார்கள் ஒரு சிலரே உள்ளனர்.

அத்தோடு ஊழல் இல்லாத நாட்டினை உருவாக்கும் செயற்பாட்டுக்கு எத்தனை அரசியல்வாதிகள் உடன்படுகிறார்கள். உள்ளாட்சி அமைப்புகளில் 90% ஊழல் நிறைந்தவை. இந்த ஊழலை அகற்ற எந்த திட்டமும் முன்வைக்கப்படவில்லை.



19ஆவது அரசியல் திருத்தம் காரணமாக அடுத்த ஜனாதிபதி எதனையும் செய்யும் அதிகாரம் இருக்காது. அனைத்து அதிகாரமும் பிரதமருக்கே இருக்கும்.

எனவே கட்சி அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் கவனம் செலுத்தக்கூடாது. அடுத்த பிரதமரைத் தெரிவு செய்வதையே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். 2020ஆம் ஆண்டில் சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைக்கப்படும் என கூறினார்.

# உலக மக்கள் தொகை கண்ணோட்டம்

ஐ.நா. உலக மக்கள் தொகை குறித்த அறிக்கையை ஜுன், 2019இல் “உலக மக்கள் தொகை கண்ணோட்டம்” என்ற தலைப்பில் ஐநாவின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத்துறை வெளியிட்டது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

உலகின் மக்கள்தொகை அடுத்த 30 ஆண்டுகளில் 200 கோடி அதிகரிக்கும். அதாவது தற்போது 770 கோடி மக்கள் தொகை இருக்கும் நிலையில், 2050ம் ஆண்டில் 970 கோடியாக அதிகரிக்கும். இந்த நூற்றாண்டின் இறுதியில் உலகின் மக்கள் தொகைப் பெருக்கம் உச்சகட்டத்தை அடைந்து, 1100 கோடியாக அதிகரிக்கும்.

## 2011ல் மக்கள் தொகை

2011 பிப்ரவரி 9 முதல் 28 வரை இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன் முதல் கட்டமாக 2010 ஏப்பிரல் முதல் செப்டம்பர் வரை வீடுகள் குறித்த விவரங்கள் எடுக்கப்பட்டன. மக்கள் தொகை கணக்கெடுப்பின் முழு விவரம் வெளியிடப்படுவதற்கு



வழக்கமாக 4-5 ஆண்டுகளாகும். ஆனால் உயர் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி, இம்முறை இரண்டு ஆண்டுகளுக்குள் வெளியிடப்படுமாறு திட்டமிடப்பட்டுள்ளது. ஆயினும் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் முன்னோட்ட அறிக்கையை 2011 மார்ச் 31 அன்று தில்லியில், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையர் சி. சந்திரமௌலி வெளியிட்டார்.

இந்தியாவில் 41,000 சிற்றூர்களில் 7936 நகரங்களில் உள்ள 24 கோடி வீடுகளில் 27 இலட்சம் அரசு ஊழியர்கள் மக்கள் தொகை கணக்கு எடுத்தனர். இதற்காக 18 மொழிகளில் 54 இலட்சம் விளக்க அறிக்கைகளும், 16 மொழிகளில் 34 கோடி படிவங்களும் அச்சிடப்பட்டன. இதற்காக ரூ. 2, 200 கோடி செலவிடப்பட்டது. இதன்படி ஒருவருக்கு ரூ. 18.33 செல விடப்பட்டது. இந்தத் தடவை திருநங்கையர் எண்ணிக்கை தனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2011 மார்ச் 1ஆம் நாளில், இந்தியாவின் மக்கள் தொகை 121 கோடியே 10 இலட்சத்து 20,000 ஆகும். (121.1. கோடி). தமிழ்நாட்டில் 7 கோடியே 21 இலட்சத்து 38 ஆயிரத்து 958 ஆகும் (7.21. கோடி).

## பாகிஸ்தான் பொலிஸ்துறைக்கு முதல் முறையாக இந்துப் பெண் தெரிவு



பாகிஸ்தானை சேர்ந்த இந்துப் பெண்ணொருவர் முதன்முறையாக பொலிஸ் துணை உதவி ஆய்வாளராக தெரிவு செய்யப்பட்டு பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்து மதத்தைச் சேர்ந்த புஷ்பா கோலி என்ற பெண் சிந்து மாகாண அரசுப் பணியாளர் தேர்வாணை நடத்திய போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்று துணை உதவி ஆய்வாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் சிந்து மாகாணத்திலேயே பணியமர்த்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சசி தரூர் பகிர்ந்த நேரு - இந்திரா காந்தி புகைப்படத்தின் உண்மை என்ன?

ஜவஹர்லால் நேருவையும், இந்திரா காந்தியையும் பெருங்கூட்டம் சூழ்ந்து நின்று பார்க்கும் புகைப்படம் ஒன்றை காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சசி தரூர் டிவிட்டரில் பகிர்ந்தார். அந்த புகைப்படம் சமூக ஊடகங்களில் வைரலாக பகிரப்பட்டுள்ளது.

ஜவஹர்லால் நேருவும், இந்திரா காந்தியும் 1954ம் ஆண்டு அமெரிக்கா சென்றபோது எடுத்த புகைப்படம் என்ற தகவலோடு தரூர் இந்த புகைப்படத்தை திங்கள்கிழமை இரவு டிவிட்டரில் பகிர்ந்தார்.

"எந்த பரப்புரை மூலமோ, வெளிநாடு வாழ் இந்தியர் சமூகத்திடையே ஏற்பாடுகள் செய்தோ, மிகைப்படுத்தப்பட்ட விளம்பரங்கள் வாயிலாகவோ இல்லாமல் 1954ம் ஆண்டு நேருவையும், இந்திராகாந்தியையும் பார்க்க. தன்னிச்சையாக, ஆர்வத்தோடு அமெரிக்க மக்கள் பெருமளவில் வந்துள்ளதை பாருங்கள்" என்று சசி தரூர் அந்த டிவிட்டர் பதிவில் கூறியிருந்தார்.

காங்கிரஸுக்கு ஆதரவான பக்கங்கள், வாட்ஸப் மற்றும் ஃபேஸ்புக் குழுக்களிலும் இந்த ட்வீட் அதிகமாக பகிரப்பட்டுள்ளது.

ஆனால், அவரது டிவிட்டர் பதிவில் தவறு உள்ளது. இந்த தவறை சசி தரூரே பின்னர் வெளியிட்ட டிவிட்டர் பதிவில் ஒப்புக் கொண்டுள்ளார்.



இந்தப் புகைப்படம் அமெரிக்காவில் எடுக்கப்பட்டதல்ல. ஜவஹருலால் நேருவும், இந்திரா காந்தியும் அப்போதைய சோவியத் யூனியனில் பயணம் மேற்கொண்டபோது எடுத்த புகைப்படமாகும்.

1956ல் எடுத்த புகைப்படமா?

சசி தரூர் பதிவிட்ட இந்த புகைப்படம் ரஷ்யாவின் மாஸ்கோவில் எடுக்கப்பட்டதாக பலரும் தெரிவித்தனர். இந்த கருத்தும் தவறானதே.

1955ம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு தனது மகளோடு சோவியத் யூனியனில் பயணம் மேற்கொண்டார்.

அங்கு முதலில் சோவியத் ஒன்றியத்தின் முதன்மை செயலாளர் அவர்களை வரவேற்றார். பின்னர் சோவியத் ஒன்றிய அதிபர் நிக்கிடா குருசேவ் ஃபுருஜி விமான நிலையத்தில் அவர்களை வரவேற்றார்.

15 நாட்கள் மேற்கொண்ட இந்தப் பயணத்தின்போது, தொடக்கப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் பலவற்றை அவர்கள் பார்வையிட்டனர்.

அப்போது, ரஷ்யாவின் மோசோ நகரில் ஓடிய மெட்ரோ ரயிலையும் நேரு பார்வையிட்டார்,

புகைப்படம் மாஸ்கோவில் எடுக்கப்பட்டதும் அல்ல.

ரஷ்யாவின் அதிகாரபூர்வ பதிவேடுகளின்படி, மாக்னிடோகோர்க், ஸ்வெர்ட்லோவ்ஸ்க், லெனின்கிராட், தாஷ்கண்ட், அஷ்கபாத் மற்றும் மாஸ்கோ உள்பட சோவியத் ஒன்றியத்தின் 12 முக்கிய நகரங்களை நேரு அப்போது பார்வையிட்டார்.

ரஷ்யாவில் நேரு பார்வையிட்ட இடங்கள் மிகவும் வைரலாக பகிரப்பட்டுள்ள நேருவும், இந்திரா காந்தியும் இருக்கின்ற இந்த புகைப்பட மானது ரஷ்யாவின் மாக்னிடோகோர்க் நகரில் எடுக்கப்பட்டதாகும்.

"ரஷ்யா பியாண்ட" (Russia beyond) என்கிற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளபடி, 1955ம் ஆண்டு ஆற்றங்கரையோர தொழில் நகரமான மாக்னிடோகோர்க் நகருக்கு நேருவும், இந்திரா காந்தியும் சென்றபோது, தொழிலாளர்களும், நகரவாசிகளும் அவர்களை பார்க்க கூட்டமாக வந்துள்ளனர்.

செவ்வாய்கிழமை காலை ட்விட்டரில் பதிவிட்ட சசி தரூர், தனக்கு ஃபார்வார்ட் செய்யப்பட்ட அந்த புகைப்படம் அமெரிக்காவில் எடுக்கப்பட்டதல்ல. சோவியத் ஒன்றியப் பயணத்தின்போது எடுக்கப்பட்டிருக்க வாய்ப்பிருப்பதாக தனக்கு கூறப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனாலும், முன்னாள் பிரதமர்கள் வெளிநாடுகளில் பிரபலமடைந்திருந்தனர் என்ற இந்தப் பதிவின் கருத்து மாறுபடவில்லை. பிரதமர் நரேந்திர மோதிக்கு மதிப்பு கிடைக்கும்போது, அது இந்தியப் பிரதமருக்கு வழங்கப்படும் மதிப்பு. இந்தியாவுக்கான மரியாதை" என்று குறிப்பிட்டுள்ளார்.

## 206-வது முறையாக தேர்தலில் போட்டி! அசராத தேர்தல் மன்னன் பத்மராஜன்

நாங்குநேரி இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக தேர்தல் மன்னன் பத்மராஜன் தேர்தல் அதிகாரியிடம் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள வீரக்காவல்புதூர் கிராமத்தைச் சேர்ந்த பத்மராஜன், வாஜ்பாய், மன்மோகன் சிங், ஜெயலலிதா, கருணாநிதி, ராஜசேகர ரெட்டி என பல தலைவர்களை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டவர்.

குடியரசுத்தலைவர் தேர்தலில் அப்துல்கலாம், பிரனாப்முகர்ஜி, ராம்நாத் கோவிந்த் உள்ளிட்டோரை எதிர்த்து போட்டியிட்டவர்.தேர்தலில் வேட்புமனுத் தாக்கலின் போது அளிக்கப்படும் டெபாசிட் தொகைக்காக மட்டும் தனது சொந்தப்பணம் ரூ.32 லட்சத்தை செலவழித்துள்ளார்.அதற்காக இவர் பெரிய செல்வந்தர் என்றெல்லாம் எண்ண வேண்டாம், நடுத்தர வாசிதான். இந்நிலையில் நாங்குநேரி தொகுதிக்கு நடைபெறும் இடைத்தேர்தலில் போட்டியிடும் அவர் அதற்கான வேட்புமனுவை தேர்தல் நடத்தும் அதிகாரியான நடேசனிடம் நேற்று வழங்கினார்.

206-வது முறையாக நாங்குநேரியில் போட்டியிடுவதாக கூறும் அவர், தனது நோக்கம் வெற்றிபெறுவது அல்ல என்றும், கின்னஸில் இடம்பிடிப்பதே தமது லட்சியம் எனவும் தெரிவிக்கிறார். ஏற்கனவே லிம்கா புத்தகத்தில் இடம்பெற்றுவிட்டதாக கூறும் அவர், கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுவிட்டால் தேர்தலில் போட்டியிடுவதை நிறுத்திக்கொள்வேன் எனக் கூறுகிறார்.இந்தியாவிலேயே அதிக முறை தேர்தலில் போட்டியிட்டு தோல்வியை தழுவிய சாதனைக்கு சொந்தக்காரர் இந்த தேர்தல் மன்னன் பத்மராஜன்.

# போரீஸ் ஜான்சனுக்கு உச்ச நீதிமன்றம் குட்டு:

பிரிட்டன் பார்லிமென்டை, பிரதமர் போரீஸ் ஜான்சன் முடக்கியுள்ளது, "சட்ட விரோதம்" என, அந்நாட்டு சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பிலிருந்து விலக, கடந்த சில ஆண்டுகளுக்கு முன், பிரிட்டன் முடிவு செய்தது. அதற்கு, "பிரெக்சிட்" என்னும் மசோதாவை தாக்கல் செய்து, பார்லிமென்டின் ஒப்புதலை பெற, நடந்த ஓட்டெடுப்பில் அப்போதைய பிரதமர், தெரசா மே அரசு தோல்வியடைந்தது. இதையடுத்து, தெரசா மே, கடந்த ஜூனில் பதவி விலகினார். தற்போது புதிய பிரதமராக, போரீஸ் ஜான்சன்உள்ளார்.

இந்நிலையில், பிரெக்சிட் விவகாரத்தில், போரீஸ் ஜான்சன் அரசுக்கு கெடு விதிக்கப்பட்டுள்ளதால், அதுவரை பிரிட்டன் பார்லிமென்டை முடக்கி வைக்க ஒப்புதல் அளிக்கக் கோரி, ராணி இரண்டாம் எலிசபெத்திற்கு பரிந்துரைத்தார். இதையடுத்து, வரும், அக். 14-ம் தேதி வரை, பார்லி.,யை முடக்கிவைக்க, ராணி, இரண்டாம் எலிசபெத் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

### மனு தாக்கல்

இந்நிலையில், பார்லி.,யை முடக்கும் பிரதமர் போரீஸ் ஜான்சனின் முடிவை எதிர்த்து இந்திய வம்சாவளி எம்.பி., ஜினா மில்லர், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.தலைமை நீதிபதி பிரிண்டா ஹாலே தலைமையிலான 11 நீதிபதிகள் அடங்கிய பெஞ் வழங்கிய தீர்ப்பு, பார்லி.யை முடக்கி வைக்க ராணிக்கு பரிந்துரைத்தது சட்டவிரோதம், பார்லி.யின் பொதுமக்கள் சபை சபாநாயகரும், பிரபுக்கள் சபையும் எடுக்க வேண்டிய முடிவை, பிரதமர் தனிப்பட்ட முறையில் முடிவெடுத்து ராணிக்கு பரிந்துரைத்தது சரியான முடிவல்ல. இதனால் எந்த விளைவும் ஏற்படவில்லை. இவ்வாறு தீர்ப்பளித்தனர்.

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பால் போரிஸ் ஜான்சன் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

# யார் இந்த கிரேட்டா தன்பெர்க்?

பருவநிலை மாற்றத்திற்கென தனி ஒரு ஆளாக போராடும் ஸ்வீடன் போராளி கிரேட்டா தன்பர்க். இவர் செய்த மாற்றங்கள் என்ன?

ஸ்வீடனை சேர்ந்த கிரேட்டா தன்பெர்க், பருவநிலை மாற்ற மாநாட்டின் கதாநாயகியாக மாறியுள்ளார். 16 வயதில் ஐ.நா மன்றத்தில் உரை, நோபல் பரிசுக்கு பரிந்துரை என காலநிலை மாற்றத்திற்கென தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார் கிரேட்டா தன்பெர்க்.

ஸ்வீடனில் தனி ஆளாக தன் போராட்டத்தை தொடங்கிய கிரேட்டா, வெள்ளிக்கிழமை மட்டும் தன் வகுப்புகளை புறக்கணித்து ஸ்வீடன் நாடாளுமன்றம் முன்பு போராடி வந்தார். அதனை தொடர்ந்து பருவநிலை மாற்றத்திற்கு உலக நாடுகளில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என கால நிலை மாற்றத்திற்காக போராட Friday For Future என அனைத்து மாணவர்களையும் ஒன்றிணைந்து போராட அழைப்பு விடுத்தார்.

சமீபத்தில் இங்கிலாந்தில் இருந்து சிறிது அளவு கூட மாசு ஏற்படுத்தாத சோலார் படகில் அமெரிக்கா வந்தவர், நியூயார்க் நகரில் மாணவர்களை ஒன்றிணைத்து காலநிலை மாற்றத்திற்கு என்ற பெரும் போராட்டத்தை நடத்தினார்.

ஐ.நாவின் பருவநிலை மாநாட்டில் பேசிய கிரேட்டா இங்கு நடக்கும் அனைத்தும் தவறாக உள்ளன. நான் இங்கு இருக்கக் கூடாது, கடல் கடந்து உள்ள என் பள்ளியில் நான் மீண்டும் படித்திருக்க வேண்டும். ஆனால், என்னால் அதைச் செய்ய முடியவில்லை.

இளைஞர்களை நம்பி எதிர்காலம் உள்ளதாகக் கூறுகிறீர்கள். உங்களுக்கு எவ்வளவு தைரியம்? என கோபம் கலந்த கண்ணீருடன் ஆக்ரோசமாக பேசினார். கடந்த தலைமுறை செய்த தவறுகளை இந்த தலைமுறையினர் அனுபவித்து வருகிறோம். அதிகாரத்தில் இருப்பவர்கள் பருவநிலை மாற்றம் குறித்தும் அதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அழகான வார்த்தைகளை பேசி வருகிறார்களே தவிர அவர்களின் நோக்கம் வேறாக உள்ளது என விமர்சித்தார்.

கிரேட்டாவின் இந்த பேச்சு சமூக வலைதளத்தில் வைரலானதால் அவருக்கான ஆதரவுக்குரல் அதிகரித்து வருகிறது. இந்திய கிரிக்கெட்டர்

4966-Thamilini Thagaval-3

ரோஹித் சர்மா, நடிகை ப்ரியங்கா சோப்ரா உள்ளிட்டோர் கிரேட்டாவுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளனர். கிரேட்டா ஆக்ரோசமாக பேசும் வீடியோவை தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்த ட்ரம்ப், பார்ப்பதற்கு நல்ல எதிர்காலத்தை எதிர்பார்க்கும் மகிழ்ச்சியான பெண்ணாக இருக்கிறார் என கிண்டலாக பகிர்ந்துள்ளார். இதனை பலர் விமர்சித்து வருகின்றனர். ஐ.நா மன்றத்தில் ட்ரம்ப் வருகையின் போது கிரேட்டாவின் உடல்மொழி வீடியோவை பலர் சமூகவலைதளத்தில் பகிர்ந்து வருகின்றனர்.



மாறி வரும் காலநிலையில் இருந்து உயிரினங்களை காப்பாற்ற நடவடிக்கை எடுங்கள் என போராடும் கிரேட்டா தன்பெர்க்குக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மூன்று நார்வே எம்.பி.க்கள் முன்மொழிந்தனர். தற்போது கிரேட்டாவின் பெயர் நோபல் பரிசுக்கான பரிந்துரையில் உள்ளது. பருவநிலை குறித்து கிரேட்டா எழுதிய ஒரு கட்டுரை அவரை பருவநிலையை காப்பாற்றும் போராளியாக மாற்றியுள்ளது என்றால் மிகையாகாது.

19ம் பக்கம் தொடர்ச்சி... பிக்பாஸ் மேடையை

கீழடி நம் சிறப்பை மீண்டும் அழுத்தமாக பறைசாற்றியிருக்கிறது என்றார் கமல்ஹாசன். அதோடு, தமிழர் நிலம் ராஜஸ்தான் வரை பரவியிருந்ததாகவும் பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

பிக்பாஸ் மேடையில் கமல்ஹாசன் தெரிவிக்கும் அரசியல் கருத்துகளுக்கு பார்வையாளர்களிடத்தில் வரவேற்பும், சமூக வலைத்தளங்களில் விமர்சனங்களும் வரத் தொடங்கியிருக்கின்றன. இந்நிலையில், மழை பொழியத் தொடங்கியிருந்தாலும், நீர் மேலாண்மை குறித்த எந்தவிதமான திட்டங்களும் நம்மிடம் இல்லை எனப் பதிவு செய்தார். உலகம் முழுக்க பல லட்சக்கணக்கானவர்கள் கண்டுகளிக்கும் பிக்பாஸ் நிகழ்ச்சியில், மக்கள் நீதி மய்யத்தின் கொள்கைகள், அரசியல் நிலைப்பாடு ஆகியவற்றை பதிவு செய்வது கமல்ஹாசனின் சாதுர்யத்தை காட்டுவதாகவே இருக்கிறது என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

# பிக்பாஸ் மேடையை அரசியல் களமாக மாற்றிய கமல்ஹாசன்!

பேனர் விவகாரம் தொடங்கி கீழடி அகழாய்வு வரை சமகால அரசியல் நிகழ்வுகள் அனைத்தையும் பேசும் களமாக பிக்பாஸ் மேடையை மாற்றியிருக்கிறார் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன்.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர் கமல்ஹாசன், தொலைக்காட்சி நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார் என பிக்பாஸ் நிகழ்ச்சியின் விளம்பரம் வந்தபோது அவரது ரசிகர்கள் மட்டுமின்றி அனைவருக்கும் ஒருவித எதிர்பார்ப்பு ஏற்பட்டது. அதனால், அந்த நிகழ்ச்சியைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க அதனை தனது கருத்துகளைப் பரப்பும் களமாகவே மாற்றிக் கொண்டார் கமல்ஹாசன்.

அந்தவகையில் பிக்பாஸ் நிகழ்ச்சியின் முதல் சீசனில் இருந்தே கிடைக்கும் வாய்ப்புகளில் தனது சமூகக் கருத்துகளையும் பேசிவந்த அவர், அண்மைக் காலமாக சமகால அரசியல் நிகழ்வுகளுக்குக் கருத்துக் கூறும் தளமாகவும் பிக்பாஸ் மேடையை பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார். அந்த வகையில், மூன்றாவது சீசன் தொடங்கிய முதல் நிகழ்ச்சியிலேயே பெரியார், தமிழகத்தில் வடமாநிலத்தவர்களின் ஆதிக்கம் என பலவற்றையும் குறிப்பிட்டு பேசினார். மேலும், போட்டியாளராக அறிமுகமான லாஸ்லியாவிடம் தமிழீழ பேச்சு வழக்கில் அநீதி கண்டு பொங்க வேண்டும், அநீதியை எதிர்க்கும் மையமாக விளங்க வேண்டும் என ஆக்ரோசமாகப் பேசினார்.

அதை தொடர்ந்து, பேனர் விபத்தில் சுபஸ்ரீ மரணமடைந்த போது, அதற்கான கண்டனத்தை பதிவு செய்ததோடு, 30 ஆண்டுகளுக்கு முன்பே தன் ரசிகர்களிடத்தில் பேனர், பாலாபிஷேகம் போன்ற வற்றைத் தவிர்க்க வலியுறுத்தியதையும் குறிப்பிட்டார். அதன்பிறகு, இந்தவார நிகழ்ச்சியில் தமிழுக்கு ஆபத்து நேரும் என்கிற நிலையில்,



**இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க**

# சிதம்பரத்துக்கு ஆதரவாக காங்., கையெழுத்து பிரசாரம்

புதுடில்லி சிறையில் உள்ள முன்னாள் நிதி அமைச்சரும், காங்., மூத்த தலைவருமான சிதம்பரத்தின் அடிப்படை உரிமை காக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் மனுவில், மூத்த காங்., தலைவர்கள் உட்பட ஐயாயிரத்துக்கும் அதிகமானோர், கையெழுத்திட்டு டுள்ளனர்.

காங்கிரசை சேர்ந்த முன்னாள் நிதி அமைச்சர்சிதம்பரம், ஐ.என்.எக்ஸ்., மீடியா வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு, டில்லி திஹார் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார். சிறையில், அவரது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதாக, காங்., கட்சியினர் குற்றம்சாட்டி வருகின்றனர். இந்நிலையில், சிதம்பரத்தின் அடிப்படை உரிமை காக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி காங்., கட்சியினர், கையெழுத்து பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக, தயாரிக்கப்பட்டுள்ள மனுவில் கூறியிருப்பதாவது: ஐ.என்.எக்ஸ்., மீடியா வழக்கில் சிதம்பரம் கைது செய்யப்பட்டு, ஒரு மாதம் ஆகப்போகிறது. ஆனால், சி.பி.ஐ., இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் சிதம்பரத்திற்கு எதிராக, ஒரு ஆதாரத்தை கூட திரட்ட முடியவில்லை. ஒரு முன்னாள் நிதி அமைச்சர், சிறையில் மிக மோசமாக நடத்தப்படுகிறார். அவருக்கு நாற்காலி, தலையணை மறுக்கப்பட்டுள்ளன.

இது, பா.ஜ., அரசின் பழிவாங்கும் அரசியல் நடவடிக்கை. அதிகாரத்தில் உள்ள ஒரு சிலரை திருப்திப்படுத்தவே, சிதம்பரம் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கான அடிப்படை உரிமைகள் காக்கப்பட வேண்டும். எனவே, இதற்கு ஆதரவளித்து அனைவரும் கையெழுத்திட வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த மனுவில், காங்., - எம்.பி.,க்கள் சசி தரூர், கார்த்தி உட்பட ஐயாயிரம் பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

**ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவு!**

ஐ.என்.எக்ஸ்., மீடியா வழக்கு விசாரணையின் போது, அன்னிய முதலீட்டு வாரியத்தின் சில முக்கிய ஆவணங்களை சிதம்பரம் தரப்பு, டில்லி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த ஆவணங்கள் எப்படி கிடைத்தன என்பது பற்றி, நீதிமன்றத்தில் சிதம்பரம் தெரிவிக்க வேண்டும் என சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா வாதிட்டார். இதையடுத்து, அந்த விபரங்களை நீதிமன்றத்தில் அறிக்கையாக தாக்கல் செய்யுமாறு சிதம்பரத்தின் வழக்கறிஞருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# ∴பாரினில் பதுங்கலா? - நித்தியைச் சுற்றி அதிரவைக்கும் "மர்மங்கள்"!

"மாடுகளை, தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் என்னால் பேசவைக்க முடியும்" என்று சவால்விட்டவர், இப்போது எங்கே இருந்துகொண்டு யூ டியூபில் பேசுகிறார் என்பதுதான் நித்தி மர்மத்தொடரின் புதிய அத்தியாயம். "நித்தியானந்தா, பிடதி ஆசிரமத்தில் பல மாதங்களாக இல்லை" என்ற தகவல், சில மாதங்களுக்கு முன்பே கசிந்தது. இப்போது அவர் வெளிநாட்டில் பதுங்கியுள்ளதாகத் தகவல் பரவிவருகிறது.

பேட்டி, பிரசங்கம், பெருநகரங்களில் பக்தர்களுக்குத் தரிசனம் என ஏதாவது ஒரு வகையில் "லைம்லைட்"டில் இருந்துகொண்டிருந்த நித்தியானந்தாவை, கடந்த ஓராண்டாக பக்தர்கள் எங்கேயுமே பார்க்க முடியவில்லை. பிடதியில் உள்ள தனது ஆசிரமத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்து வந்த நித்தியானந்தா, கடந்த பல மாதங்களாக யூ டியூப், ∴பேஸ்புக் மூலமாக மட்டுமே பக்தர்களைச் சந்திக்கிறார். நேரில் சந்திப்பதேயில்லை. நித்தியானந்தா தரப்பில் விசாரித்தபோது "அவர் பயணம் செய்வதற்காக "கேரவன்" போன்று சகலவசதிகளுடன் ஒரு வாகனம் தயார் செய்யப்பட்டுள்ளது.

நித்தியானந்தா வெளிநாடுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக சில மாதங்களுக்கு முன்பே தகவல் பரவியது. ஆனால், எதையும் உறுதி செய்ய முடியவில்லை. இதுதொடர்பாக ஜூனியர் விகடன் இதழில் கழுகார் பகுதியில் சில மாதங்களுக்கு முன்பே எழுதியிருந்தோம். இப்போது வரும் தகவல்கள், அதை உறுதிப்படுத்துவதைப்போல் இருப்பதோடு, மேலும் பல அதிர்ச்சிகரமான தகவல்களும் பகிரப்படுகின்றன.

ஆசிரம உள்விவகாரங்களை அறிந்த சிலரிடம் பேசினோம்... "2018ம் ஆண்டு இறுதியில் வடமாநிலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொண்டிருந்தவர், சில ஏஜெண்டுகள் மூலம் வெனிசுலா நாட்டுப் போலி பாஸ்போர்ட்டைப் பெற்றார். இதற்கு கோடிக்கணக்கான ரூபாய், ஹவாலா முறையில் அளிக்கப்பட்டுள்ளது. தரைவழி மார்க்கமாக நேபாளம் சென்ற நித்தியானந்தா, வெனிசுலா பாஸ்போர்ட் மூலம் கரீபியத் தீவுகளுள் ஒன்றான "டொமினியன் குடியரசு" நாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டார்.

தற்போது அங்கேயிருந்துதான், "கிரீன்டெக்" என்ற தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நேரலையாக தன் பக்தர்களுக்கு காட்சித் தருகிறார். வாரத்துக்கு ஒருமுறை காலையும் மாலையும் ∴பேஸ்புக்கில் நேரலையாக உரையாடுவதும் அங்கே உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இருந்துதான். கடந்த ஒரு வருடமாக அவர் இந்தியாவிலேயே இல்லை. இந்தத் தகவலை மிகவும் தாமதமாகத் தெரிந்துகொண்ட கர்நாடக போலீஸார், அவரை எப்படியாவது இந்தியா வுக்குக் கொண்டுவர சில மறைமுக நடவடிக்கைகளை மேற்கொள் கின்றனர்"" என்றனர்.

அதிர்ச்சிகரமான இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து நாம் கேள்வி எழுப்பியதும், முதலில் பரபரப்பான நித்தியானந்தாவின் ஆதரவாளர்கள், பிறகு சுதாரித்துக்கொண்டு, ""அவர் சமீபகாலமாக பிடதி ஆசிரமத்தில் பக்தர்களைச் சந்திக்காமல் இருப்பது உண்மைதான். வீடியோ கான்∴ பரன்ஸ் மூலமாகத்தான் சந்தித்துவருகிறார். இதற்காக, அவர் வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்றுவிட்டார் என்பதும், சட்டத்தின் முன் நிற்க அவர் அஞ்சுகிறார் என்பதும் சுத்தப்பொய்" என்றனர்.



நித்தியின் உறவினர் சிலர் சென்னையில் வசித்துவருகிறார்கள். அவர்கள் தரப்பில் விசாரித்தபோது ""அவர் பயணம் செய்வதற்காக "கேரவன்" போன்று சகலவசதிகளுடன் ஒரு வாகனம் தயார் செய்யப்பட்டுள்ளது. அதில்தான் அவர் இந்தியா முழுவதும் ஆன்மிகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவ்வப்போது எங்களிடமும் பேசுகிறார். ஆனால், என்ன காரணத்தால் பக்தர்களை நேரடியாகச் சந்திக்காமல் இருக்கிறார் என்பது தெரியவில்லை. சமீபத்தில்கூட சென்னையில் உள்ள அவரின் அத்தை ஒருவரைச் சந்திக்க வந்து சென்றார்" என்று அதிரவைத்தனர்.


## வெளிவரும் உண்மைகள்

பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் எனது தந்தையை கொலை செய்ய துமிந்த சில்வாவுக்கு அறிவுறுத்தியதாக கூறப்படுகின்றது. – **மெர்வின் சில்வா**

# திமுகவின் வங்கிக் கணக்கில் நிரந்தர வைப்புத் தொகை எவ்வளவு தெரியுமா?

கடந்த மக்களவைப் பொதுத்தேர்தலில் திமுகவின் வரவு செலவு கட்சி நிதிநிலை பற்றி தேர்தல் ஆணையத்திடம் பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில் அதன் நிதி நிலை மற்றும் தேர்தல் செலவுகளை தெரிவித்துள்ளது.அதில் தெரிவிக்கப்பட்டுள்ள பல தகவல்கள் இன்று தமிழக அரசியலில் மட்டுமில்லாமல் தேசிய அரசியலிலும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது. அதில் ஒன்று திமுகவுக்கு எந்தெந்த வங்கிகளில் கணக்கு உள்ளது, அந்த வங்கிகளில் திமுகவுக்கு எவ்வளவு பணம் இருப்பு உள்ளது, திமுகவிடம் கையிருப்பு ரொக்கமாக எவ்வளவு உள்ளது என்பது போன்ற விவரங்கள் பேசப்பட்டுவருகிறது.

இன்று அரசியலில் வலிமையாக செயல்படுவதற்கு அரசியல்வாதிகளுக்கு மட்டுமில்லாமல் அரசியல் கட்சிக்கே பணம் அவசியம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. தமிழகத்தின் பிரதான கட்சியான திமுகவும் தனது நிர்வாக செலவுகளுக்காக எந்தெந்த வங்கியில் எவ்வளவு இருப்பு வைத்துள்ளது என்ற விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்த பிரமாணப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது.



ஐந்து தமிழ் கட்சிகள் இணைந்த நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இறுதியில் வெளிநடப்பு செய்தது.

அந்த ஆவணங்களை தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் பொதுமக்களின் பார்வைக்காக பதிவேற்றியுள்ளது.

அதன் அடிப்படையில், "திமுகவிடம் 28 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் கையிருப்பாக ரொக்கமாக உள்ளது என்று தெரிவித்துள்ளது. அதே போல, தேனாம்பேட்டை இந்தியன் வங்கி கிளையில் திமுகவின் பெயரில் நிரந்தர வைப்புத் தொகையாக 128 கோடியே 11 லட்சத்து 55 ஆயிரத்து 343 ரூபாய் இருப்பு உள்ளதாக தெரிவித்துள்ளது. ஆர்.ஏ.புரம் இந்தியன் வங்கி கிளையில் உள்ள திமுக பெயரில் நிரந்தர வைப்புத்தொகையாக 11 கோடியே 78 லட்சத்து 35 ஆயிரத்து 839 ரூபாய் இருப்பதாக தெரிவித்துள்ளது. அதே போல, திருவல்லிக்கேணியில் உள்ள இந்தியன் வங்கி கிளையில் திமுகவுக்கு நிரந்தர வைப்புத்தொகையாக 3 கோடியே 58 லட்சத்து 80 ஆயிரத்து 194 ரூபாய் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது. கரூரில் உள்ள இந்தியன் வங்கி கிளையில் உள்ள திமுக பெயரில் 2 லட்சம் ரூபாய் நிரந்தர வைப்புத் தொகை இருப்பதாகவும் தெரிவித்துள்ளது. மேலும், தேனாம்பேட்டை இந்தியன் வங்கி கிளையில் திமுகவின் வங்கி கணக்கில் 4 கோடியே 70 லட்சத்து 74 ஆயிரத்து 901 ரூபாய் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் திமுகவிடம் மொத்தம் 148 கோடியே 50 லட்சத்து 13 ஆயிரத்து 277 ரூபாய் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இது மட்டுமில்லாமல், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் தேர்தல் முடிவுக்கு வந்த நாள் வரை திமுக தலைமையகம் பல்வேறு ஆதாரங்கள் மூலம் பணமாக 1 லட்சத்து 4 ஆயிரத்து 977 ரூபாயும் காசோலை மற்றும் வரைவோலை மூலமாக 50 கோடியே 29 லட்சத்து 4 ஆயிரத்து 200 ரூபாய் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்தல் முடிந்த பிறகு திமுகவின் வங்கிகணக்கில் நிரந்தர வைப்புத் தொகை உள்பட 119 கோடியே 54 லட்சத்து 11 ஆயிரத்து 972 ரூபாய் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெளிவரும் உண்மைகள்

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் முதன் முறையாக வாக்களிக்கப் போகும் 17 மில்லியன் வாக்காளர்களும் கோட்டபாயாவின் சர்வாதிகார போக்கை அறிந்து கொள்ள வேண்டும் – **ஹிருணிக்க**

# இந்திய - அமெரிக்க வர்த்தகம்

இந்தியா அதிகப்படியான வரி விதிப்பதாக டிரம்ப் கூறுவது சரியா? BBC Reality Check.

கூற்று: இறக்குமதி பொருட்களுக்கு உலகிலேயே அதிகளவில் இந்தியா வரி விதிப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

உண்மை: இந்தியாவின் சராசரி வரி விதிப்பு உலகின் மிகப்பெரிய பொருளாதாரங்களைக் காட்டிலும் அதிகமானதாகும். ஆனால், பிற நாடுகள், குறிப்பிட்ட சில பொருட்களில் அதிக வரி விதிக்கின்றன. மேலும் சீனாவுடனான வர்த்தக போரில் சீன பொருட்களுக்கு 360 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் மேல் வரி விதித்தது அமெரிக்கா.

இந்தியப் பிரதமர் மோதியின் அமெரிக்கப் பயணத்தில் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையேயான வர்த்தகம் முக்கிய அம்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.இருநாடுகளுக்கு மத்தியில் அரசியல் மற்றும் மூலோபாய உறவுகள் வளர்ந்தாலும், வர்த்தக ரீதியாகப் பதற்றங்கள் நிலவி வருகின்றன.

இந்தியாவின் ஏற்றுமதி பொருட்களுக்கான வரிகள் "ஏற்றுக் கொள்ளமுடியாதபடி" உள்ளதாகவும், இந்தியா "வரிகளின் ராஜா" என்றும் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பொருட்களுக்கு வரி விதிக்கும் விஷயத்தில் இந்தியா மோசமாக நடந்து கொள்வதாக அமெரிக்காவின் குடியரசு கட்சியைச் சேர்ந்த செனட்டர் லிண்ட்சே கிரஹாம் தெரிவித்துள்ளார்.

உலக வர்த்தக நிறுவனத்தின் பிற நாடுகளுக்கு, இந்தியா விதிக்கும் வரி எந்த ஒரு முக்கிய பொருளாதாரத்தைக் காட்டிலும் அதிகமானதாகும். உலக வர்த்தக நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளும்போது விதித்துக் கொள்ளும் சராசரி வரியை அறிக்கை குறிக்கிறது.

2018ஆம் ஆண்டு இந்தியாவின் சராசரி வரி விகிதம் 17.1%. அது ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை காட்டிலும் அதிகமாகும். அந்நாடுகளின் வரி விகிதம் 3.4% லிருந்து 5.2% வரையாகும்.

## முக்கிய மற்றும் வளரும் நாடுகளின் சராசரி வரி விதிப்பு

இந்தியாவின் சராசரி வரி அளவு பிற வளரும் நாடுகளைக் காட்டிலும் அதிகமாகும். 2018ஆம் ஆண்டு தென் கொரியாவின் சராசரி வரி விகிதம் 13.7%, பிரேசிலின் வரி விகிதம் 13.4% இதன்படி டிரம்ப் சொன்னது சரிதான். இந்தியாவின் வரி விதிப்பு சர்வதேச அளவில் அதிகமான ஒன்றாகவே உள்ளது.

கடந்த வருடம் அமெரிக்கா மற்றும் சீனா இடையே நடைபெற்ற வர்த்தக போரில் இருநாடுகளும் பரஸ்பரம் வரி விதித்தன.இருப்பினும் இது உலக வர்த்தக நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையில் பிரதிபலிக்கவில்லை. இம்மாதிரியான வரி விதித்தல் இருநாடுகளின் சராசரி வரி விதிப்பை அதிகரிக்கும்.

## என்ன சொல்கிறது இந்தியா?

உலக வர்த்தக நிறுவனத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட அளவி லேயே தங்களது சராசரி வரி விதிப்பு இருப்பதாக இந்தியா கூறுகிறது.

மேலும் இந்திய அதிகாரிகள் பிற வரி விகித முறைகளை சுட்டிக்காட்டுகின்றனர்.இதில் இறக்குமதியான பொருட்களின் அளவை வைத்துக் கொண்டு, வசூலிக்கப்பட்ட வரிகளின் சராசரி கணக்கிடப்படுகிறது.

இதன்படி 2017ஆம் ஆண்டு இந்தியாவின் சராசரி வரி விதிப்பு 11.7% பிரேசில் சராசரி வரி விதிப்பு - 10% மற்றும் தென் கொரியாவின் சராசரி வரி விதிப்பு 8.1%.ஆனால் இந்த முறையில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பானின் சராசரி வரி விதிப்பு முறையே 2.3%, 3% மற்றும் 2.4% ஆக உள்ளது.

இந்தியா மட்டும் அதிக வரிகளை விதிப்பதில்லை. எடுத்துக் காட்டாக ஜப்பான், தென் கொரியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய



நாடுகள் குறிப்பிட்ட சில இறக்குமதி பொருட்களுக்கு அதிக வரி விதிக்கின்றன.

சில வகையான புகையிலை பொருட்களுக்கு அமெரிக்கா 350% வரி விதிக்கின்றது. மேலும் சில வகையான ஐரோப்பிய சீஸ், சாக்லெட் மற்றும் வேர்க்கடலைக்கும் 100% அல்லது அதற்கு மேலும் வரி விதிக்கிறது. ஆனால் அமெரிக்காவின் ஒட்டுமொத்த வரி விதிப்பு மிகவும் குறைந்த ஒன்றாகவே இருந்துள்ளது. ஒரு அறிக்கையின்படி உலகின் மிகக் குறைந்த வரி விதிப்பு நாடாக அமெரிக்கா இருந்துள்ளது.

## அமெரிக்கா மீது இந்தியா விதிக்கும் வரி என்ன?

பாதாம், வால்நட், ஆப்பிள் மற்றும் எ∴கு உட்பட 28 பொருட்களுக்கு இந்தியா ஜுன் மாதம் வரி விதித்தது. அமெரிக்க வால்நட்கள் மீதான வரி 120% வரை சென்றது. கடலை மற்றும் சில பயறு வகைகளுக்கு 70% வரை வரி விதிக்கப்பட்டது.

இந்தியாவுக்கான சிறப்பு வர்த்தக சலுகைகளை அமெரிக்கா திரும்பப் பெற்றுக் கொண்ட பிறகு இந்தியா இம்மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொண்டது.கடந்த ஆண்டு எ∴கு மற்றும் அலுமினியத்துக்கான வரிகளிலிருந்து இந்தியாவை விலக்க அமெரிக்கா மறுத்துவிட்டதிலும் இந்தியா கோபடைந்திருந்தது.

பொதுவாக, ரத்தின கற்கள், மருந்துகள், இயந்திரங்கள் மற்றும் கனிம எரிபொருட்கள் மற்றும் வாகனங்களை அமெரிக்காவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்கிறது.

விவசாய பொருட்களை தவிர்த்து, அமெரிக்கா சில விலைமதிப்புமிக்க கற்கள், கனிம எரிபொருட்கள், விமானம், இயந்திரம், கண்ணாடி மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்கிறது.

## இந்தியாவுடனான அமெரிக்க வர்த்தகத்தில் உயர்வு

ஹார்லி டேவிட்சன் இருசக்கர வாகனங்களுக்கு இந்தியா 100% வரி விதிப்பதை டிரம்ப் சுட்டிக்காட்டினார். ஆனால் அது அமெரிக்காவின் புகாருக்குப் பிறகு பாதியாகக் குறைக்கப்பட்டது.

மேலும் தகவல் தொழில்நுட்ப பொருட்களுக்கு இந்தியா விதிக்கும் வரிகள் குறித்தும் அமெரிக்கா கவலை தெரிவித்தது.இருப்பினும் இருநாடுகளுக்கும் இடையே உள்ள வர்த்தகம் உயர்ந்து கொண்டுதான் வருகிறது. 2018ஆம் ஆண்டு அது 142.1பில்லியன் அமெரிக்க டாலர்களை தொட்டது.

# சனிப்பெயர்ச்சி 2020: ஏழரை சனியால் பாதிப்பா? நள சரித்திரம் படிங்க பாதிப்பு நீங்கும்!

நவகிரகங்களில் சனிபகவான் மெதுவாக நகர்பவர். ஒரு ராசியில் இரண்டரை ஆண்டுகாலம் சஞ்சரிப்பவர். சனீஸ்வரன் என்று சொல்வதை விடவே சனைச்சரன் என்று கூறுவதே பொருத்தமானது. இவர் 12 ராசிகளையும் கடக்க 30 ஆண்டுகாலம் எடுத்துக்கொள்கிறார். சனிபகவான் என்றாலே பலருக்கும் பயம்தான். காரணம் ஒரு ராசிக்காரரை ஏழரை ஆண்டுகாலம் பாடாய் படுத்தி விடுவார். அதிலிருந்து மீண்டு மூச்சு விட்டால் அர்த்தாஷ்டம சனியாகவும், அப்புறம் கண்டச்சனி, அஷ்டமசனியாகவும் அசத்தி எடுத்து விடுவார். எனவேதான் சனியால் ஏற்படும் சங்கடங்கள் தீர நாம் நள சரித்திரம் படிக்க வேண்டும் என்று ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

சனிபகவான் பிடித்தபோது ராமர் வனவாசம் சென்றார். நாடு இழந்து ஒரு சமயம் மனைவியையும் இழந்தார். அதேபோல பாண்டவர்களும் சூதாடி நாடு இழந்து சகோதரர்களுடன் வனவாசம் சென்றார் தர்மராஜா. தாங்கள் பட்ட கஷ்டத்தை கூறி பரத்வாஜா முனிவரிடம் வருந்திய போது சனியால் நளமகாராஜா பட்ட கஷ்டத்தை கூறி அவர்களை ஆறுதல்படுத்தினார்.

சனிபகவான் சூரிய புத்திரன். வாரத்தில் வரும் முதல்நாள் சூரியனுக்கும், கடைசி நாள் சனிக்கும் என்று வகுத்தார்கள். சனிக்கு கருமை உடல். எனவே, காக்கை வாகனம். கறுப்பு வஸ்திரம். கருப்பு தான்யமாக எள். எள் எண்ணெய் அவர் விரும்புவது. நீலக் குவளை மலர், வன்னி இலை, புளு சபையர் என்ற நீலக்கல் என அனைத்தும் சனீஸ்வரனுக்கு பிடித்தமானது. இவருக்கு நீளாதேவி, மந்தாதேவி, சேஷ்டாதேவி என மூன்று மனைவியர். குளிகன் என்றொரு மகன். இவர் இரும்பு, எண்ணெய், கருப்பு தானியம், பூமியில் புதைந்த புதையல் முதலியவற்றுக்குக் காரகர். அவரவர் கர்மவினைப்படி வறுமை, கலகம், நோய், அவமதிப்பு ஆகியவற்றை உண்டாக்குகிறவர். ஒருவருடைய ஜாதகத்தில் இவர் நல்ல இடத்தில் தங்கி வலுவும் பெற்றிருப்பாரானால் அளவற்ற நலன்களை வாரி வழங்குவார்.

## சனிதோஷம்

சனிபகவான் மகரம், கும்பம் ராசிகளில் அதிபதி. மேஷம் ராசியில் நீசமடையும் சனிபகவான், துலாம் ராசியில் உச்சமடைகிறார்.

சனிபகவானுக்கு நவகிரக தலங்களில் திருநள்ளாறு பிரசித்தி பெற்றது. நீதி அரசராக கலியுகத்தில் சனி ஆட்சி செய்யும் இடம் இந்த தர்ப்பைக் காடு என்ற திருநள்ளாறு. இங்கே தர்ப்பராண்யேஸ்வரர் சந்நதியின் கிழக்கு கோபுரத்தின் வடக்கு திசையில் காக்கை வாகனத்தோடு, நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார்.

திருநள்ளாறு நாயகனை தரிசனம் செய்தால் சனி தோஷத்தால் வந்த நோய், பொருள் விரயம், பேராபத்து, சஞ்சலம், துக்கம், விரக்தி, சோம்பல், தொழில் இடையூறு என அனைத்து சோதனைகளும் நீங்கும்.

## நளன் தமயந்தி திருமணம்

நிடத நாட்டை ஆண்ட நளனும் விதர்ப்ப நாட்டு இளவரசியும் ஒருவரை ஒருவர் பார்க்காமலேயே காதல் கொண்டனர். இருவரின் காதலுக்கும் அன்னப்பறவை தூது போனது. தமயந்தியின் அழகில் தேவர்களும் மயங்கினர். மகளுக்கு திருமணம் செய்ய சுயம்வரம் அறிவித்தார் விதர்ப்ப நாட்டு மன்னன். அந்த சுயம்வரத்தில் பங்கேற்க நளன் சென்றான். கூடவே தேவர்களும் போக, சனிபகவானும் வந்தார். ஆனால் தமயந்தி மாலையிட்டதோ நளனுக்குத்தான்.

## நளனை பிடித்த சனி

சனிபகவானுக்கு நளன் மீது பொறாமை ஏற்பட்டது. பழிவாங்க சமயம் பார்த்து காத்திருந்தார். நளனுக்கு ஏழரை சனி பிடிக்கும் காலம் வந்தது. கூடவே புத்தியும் மாறியது. பூஜை செய்ய போகும் போது கால்களை சரியாக கழுவாமல் போனார். அதுதான் சமயம் என்று பின்னங்காலில் பிடித்தார் சனிபகவான். அதுவரை புத்தியோடு இருந்த நளனுக்கு மாறியது புத்தி. புட்கரன் என்ற அரசன் சூதாட அழைத்தான். நளன் சூதாடி நாடு நகரங்களை தோற்றான். மனைவி மக்களோடு அரண்மனையை விட்டு வெளியேறினான்.

## காட்டில் தவிக்கவிட்ட நளன்

தம் பிள்ளைகளை மாமானார் வீட்டிற்கு அனுப்பினான். மனைவியோடு காட்டுக்கு சென்றான். அங்கேயும் விதி விளையாடியது. உடுத்திய துணியை கூட உருவிக்கொண்டு விட்டார் சனிபகவான். மனைவியாவது சந்தோஷமாக இருக்கட்டும் என்று கூறி காட்டில் தனியாக விட்டு விட்டு சென்றார் நளன்.

விடிந்ததும் கணவனை காணாமல் தவித்த தமயந்தியை அவரது அப்பாவின் வீட்டிற்கு கொண்டு போய் சேர்த்தனர்.

## உருவம் மாறிய நளன்

காட்டில் சுற்றித்திருந்த நளனை கார்கோடன் என்ற கருநாகம் தீண்டியது. இதில் அழகாய் இருந்த நளன் அசிங்கமாக மாறினான். விகாரமாக இருந்த நளன் தனது பெயரை வாகுனன் என்று மாற்றி வைத்துக்கொண்டு இருதுபன்னன் என்ற மன்னனிடம் தேர்ப்பாகனாக வேலை செய்தான்.

காணமல் போன கணவன் எங்கிருக்கிறான் என்று கண்டு பிடிக்க மீண்டும் தமயந்திக்கு சுயம்வரம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த சுயம்வரத்திற்கு மன்னன் இருதுபன்னன் தனது தேரோட்டியை அழைத்து வந்தார்.

## சுய உருவம் பெற்ற நளன்

அரண்மனை சமையற்கூடத்தில் சமையல் செய்து கொண்டிருந்த போது தன் பிள்ளைகளிடம் வாகுனன் பாசமாக பேசியதை கேட்டு அவரே தனது கணவன் என்று அடையாளம் கண்டு கொண்டாள் தமயந்தி. உடனே தமயந்தியின் அப்பாவும் வாகுனனை அழைத்து கேட்டார். சனி விலகும் நேரம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்தார் நளன். கார்கோடகன் கொடுத்த அரவுரியை எடுத்து அணிந்து சுய உருவத்தை அடைந்தார். மனைவி மக்களுடன் இணைந்த நளன், தான் சூதாடி இழந்த தேசத்தை போரிட்டு வென்றார்.

## நாராதர் அறிவுரை

நாடு மனைவி மக்கள் அனைவரையும் அடைந்தாலும் நளன் மனதில் அமைதி இல்லை. அப்போது நாரதர் நளனின் கனவில் தோன்றினார். நளனின் மன அமைதி இல்லாமைக்குக் காரணம் சனியே என்றும் சனி விலக ஆலயங்களுக்கு பயணம் செய்யுமாறு கூறினார். நளன் மனைவி மக்களோடு திருத்தலப் பயணம் மேற்கொண்டான். வழியில் பரத்வாஜ முனிவரைக் கண்டு வணங்கினான். பரத்வாஜர் நளனிடம் திருநள்ளாறு சென்று தர்ப்பாரண்யேஸ்வரரை வழிபட்டால் சனிபகவான் விலகி சாந்தி நிலவும் என்று கூறினார்.

## சனிக்கு சந்தோஷம்

நளச் சக்ரவர்த்தியும் திருநள்ளாறு ஈசனுக்கு, பால், தயிர், பழரசம், சந்தனக் குழம்பு, பன்னீர், இளநீர், நல்லெண்ணெய் போன்றவற்றால் அபிஷேகம் செய்து சாதத்தில் நல்லெண்ணெயும், எள் பொடியும் கலந்து நைவேத்யம் செய்தார். இவற்றை எல்லாம் சனி பகவான் ஒரு தூணில் மறைந்து நின்று கண்டு ரசிக்க, போகமார்த்த பூண்முலையாள்

நாயகனாம் சிவன், பிரசன்னமாகி, நளனுக்கு ஏற்பட்ட பிரச்சினையை போக்கினார். பின் சனி பகவானை நோக்கி இங்கே நில். இன்று தொட்டு உனக்கும் ஈஸ்வரன் என்ற பெயர் சேரட்டும் என்றார். அன்று முதல் சனி பகவான், சனீஸ்வரன் ஆனார்.

## தோஷம் நீக்கும் நள தீர்த்தம்

சனிபகவானை வணங்கும் முன், நளமகாராஜன் ஒரு குளத்தை வெட்டினார். இதுவே நள தீர்த்தம் என இன்றும் போற்றப்படுகிறது. நள தீர்த்தத்தில் எள் எண்ணெய் தேய்த்து நீராடிய பின், பழைய ஆடைகளை அங்கேயே விட்டுவிட வேண்டும் என்பது வழிபாட்டு முறைகளில் ஒன்று. இதை சனீஸ்வரர் நேசிக்கிறார். இப்படி செய்வதினால் எப்படிப்பட்ட தோஷமும், நவகிரஹ கோளாறும் நீங்கும்.

## வெற்றி தரும் சனிபகவான்

இங்குள்ள கலிதீர்த்த விநாயகரைத்தான் முதலில் வணங்க வேண்டும். சனி பகவானின் பிரசாதத்தையோ, சிவபெருமானின் பிரசாதத்தையோ வீட்டிற்கு கொண்டு செல்ல வேண்டாம் என்று ஆலோசனை சொல்லப்பட்டாலும், திருநள்ளாறு சனீஸ்வர பிரசாதத்தை வீட்டிற்கு கண்டிப்பாக கொண்டு செல்ல வேண்டும் என்கின்றனர் சித்தர்களும் ரிஷிகளும். புரட்டாசி மாத பௌர்ணமி பூஜையும், மகா சிவராத்திரி பூஜையும், சனி பெயர்ச்சி பூஜையும் சிறந்தவை. இந்த காலங்களில் திருநள்ளாற்றில் தங்கி வழிபட்டால், முடியாதது ஒன்றும் இல்லை. எதையும் சாதிக்கலாம் என்கிறார் அகஸ்தியர்.

## சனிக்கு பிடித்தமானது

நளசரித்திரம் படிப்பவர்களுக்கு சனிபகவான் சங்கடம் தரமாட்டார். சனிபகவான் யாரை பிடிப்பார் தெரியுமா? உலர்த்தாத துணியை உடுத்துபவர்களையும் ஈரம் சொட்ட சொட்ட வீட்டினுள் செல்பவர்களை பார்த்தாலும் சனிக்கு அவர்கள் மீது பாசம் அதிகம்.

முதல்நாள் உடுத்திய துணியை மறுநாளும் பயன்படுத்துபவர் களை பார்த்தால் சனி மிகவும் பிடிக்கும். குளிக்காமல் அசுத்தமாக இருப்பவர்களை கண்டாலும், தலைசீவாமல் தலைவிரி கோலமாக இருப்பவர்களை கண்டாலும் சனிக்கு பிடிக்கும்.

## சனி பாதிப்பு

இருள் சூழ்ந்த இடங்கள், அமங்கலமான சொற்கள் பேசுபவர்கள், சுத்தம் இல்லாத இடங்கள், மண்ணாசை, பொன்னாசை கொண்டவர்கள்,

அடுத்தவர்களின் மனைவியை ஆள நினைக்கும் சண்டாளர்களைக் கண்டால் சனி பிடித்து ஆட்டி வைப்பார். முக்கியமாக யாரையும் சனியனே என்று திட்டக்கூடாது.

சுத்தம் செய்யாத வீட்டிலும் நித்தம் அழுகுரல் கேட்கும் வீட்டிலும் சனி சந்தோஷமாக தங்கி விடுவார். அந்த வீட்டில் வசிப்பவர்களை ஆட்டி படைத்துவிடுவார் சனிபகவான். எனவே மக்களே சுத்தமாக இருங்க, நேர்மையாக இருங்க, சனிபகவான் உங்க பக்கம் தீய பார்வையை செலுத்த மாட்டார்.

## வெளிவரும் உண்மைகள்

பௌத்த மதத்தை தமிழர் மதிக்கும்போது சிங்களவரே அதை அவமதிக்கின்றனர். **– ஜனநாயக போராளிகள் கட்சி**

நீதிமன்றக் கட்டளை அவமதிக்கப்படுவதால் வட – கிழக்கில் சட்ட ஆட்சிக்கு மதிப்பிருக்காது. – **ஜனாதிபதி சட்டத்தரணி சிற்றம்பலம்**

தமிழர்களுக்கு ஒரு சட்டம் பிக்குகளுக்கு வேறு சட்டம் – சார்ள்ஸ் நிர்மலநாதன் பா.உ.

பௌத்த துறவிகளின் அநாகரிகம் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் **– யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்**

## சர்வதேசம்

கனடா தேர்தல் கருத்துக்கணிப்பில் தற்போதைய பிரதமர் ட்ரூடோவுக்கு பின்னடைவு.

முன்னாள் பிரான்ஸ் ஜனாதிபதி மறைவு. இவரை மக்கள் பாரிஸின் முதல்வராகவே இன்னமும் கணிக்கின்றனர்.

சிம்பாவே ஜனாதிபதி முகாபே சிங்கப்பூரில் காலமானார். சிம்பாவேயின் நீண்ட காலம் ஜனாதிபதியாக கடமையாற்றியவர் இவர்.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவராக கிறிஸ்டியனா ஜோர்ஜியா தெரிவாகியுள்ளார்.

37 லட்சம் சிறாரின் கல்விக்கு ஆபத்து – யுனிசெவ்

4966-Thamilini Thagaval-3

# இலங்கை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் - முழுவிபரம்!

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களின் உத்தியோகபூர்வ பட்டியலை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் வெளியிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் நடவடிக்கையானது இன்று 11 மணியுடன் நிறைவடைந்துள்ள நிலையில், மொத்தமாக கட்டுப்பணம் செலுத்தப்பட்ட 41 வேட்பாளர்களில் 35 பேர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன் சமல்ராஜபக்ஷ மற்றும் குமாரவெல்கம ஆகியோர் தம் வேட்புமனுக்களை தாக்கல் செய்யவில்லையென தேர்தல்கள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

## ஜனாதிபதி வேட்பாளர்கள்

1. சமரவீர வீரவந்தி
2. ஜெயந்தகேதகோடா
3. பத்தரமுல்லை சீலரத்னதேரர்
4. திருமதிஅஜந்தா விஜேசிங்கபெரேரா
5. சமன்சிரி ஹெராத்
6. எஸ்.எஸ்.பி. லியனகே
7. எம்.கே. சிவாஜிலிங்கம்
8. சமன்பிரசன்னாபெரேரா
9. சிறிபாலஅமரசேனா
10. பெல்தேகமகேநந்தமித்ரா
11. சரத் விஜிதகுமாரகீர்த்திரத்னா
12. அசோகாவாடிகமங்கவா
13. துமிந்தநாகமுவ
14. பிரியாத்முனியன்எதிரிசிங்க
15. அரியவன்சதிசநாயக்க
16. அஜந்தாடிசோய்சா
17. சாமிந்தஅனுருத்த
18. மில்ராய் பெர்னாண்டோ
19. அஹமதுஹசன் முஹம்மது அலவி
20. ரோஹன்பல்லேவத்த
21. நாமல் ராஜபக்ஷ
22. அபரேக்கேபுண்யானந்தாதேரர்
23. வஜிரப்பனேவிஜயசிறிவர்தன
24. அனுரகுமாரதிஸ்நாயக்க
25. அருணடிசோய்சா
26. எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா
27. இல்லியாஸ்ஹைதர்முஹம்மது
28. பசீர்சேகுதாவூத்
29. பியசிறிவிஜயநாயக்க
30. ராஜீவ் விஜேசிங்க
31. சரத் மனமேந்திரா
32. சுப்பிரமணியம்குணரத்னம்
33. சஜித்பிரேமதாச
34. கோட்டாபயராஜபக்ஷ
35. மகேஷ்சேனநாயக்க

# ஆஸ்திரேலியா: வெளிநாட்டினருக்கான புதிய பிராந்திய விசாக்கள்!

ஆஸ்திரேலியாவில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட உள்ள பிராந்திய விசாக்கள், வெளிநாட்டினர் ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாக வசிப்பதற்கான வழியை ஏற்படுத்துகின்றது.அதே சமயம், பிராந்திய விசாக்கள் மூலம் PR எனப்படும் நிரந்தர வதிவிடம் கோரி விண்ணப்பிக்கும் பொழுது, சம்பந்தப்பட்ட நபர் பிராந்திய பகுதியில் மூன்றாண்டுகள் வாழ்ந்ததை நிரூபிக்க வேண்டும் என ஆஸ்திரேலிய குடியேற்றத்துறை அமைச்சர் டேவிட் கோலிமன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பிரதான நகருங்களுக்கு வெளியே உள்ளவை பிராந்திய பகுதிகளாக பார்க்கப்படுகின்றது. இவ்வாறான பகுதிகளில் பணியாற்ற ஆட்கள் பற்றாக்குறை நிலவி வருவதால், வரும் நவம்பர் மாதம் திறன்வாய்ந்த குடியேறிகளுக்கான 2 புதிய பிராந்திய விசாக்கள் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றன.

## பிராந்திய விசாக்கள்

1. பணி வழங்குபவர்கள் மூலம் திறன்வாய்ந்தவர்களுக்கு வழங்கப்படும் விசா

2. திறன்வாய்ந்தவர்களுக்கு ஆஸ்திரேலிய உள்ளூர் அரசுகள் அல்லது பிராந்திய ஆஸ்திரேலியாவில் பணியாற்ற தகுதியுடைய குடும்ப உறுப்பினர் மூலம் வழங்கப்படும் விசா

இந்த புதிய விசாக்கள் குறித்த முழுமையான விவரங்களை ஆஸ்திரேலிய உள்துறை இன்னும் வெளியிடாத சூழலில், பிராந்திய விசா கொண்ட குடியேறியின் நிரந்த வதிவிட விண்ணப்பத்தை பரிசீலிக்கும் போது அரசு தனிப்பட்ட நபரின் விவரங்களை ஆராயும் என குடியேற்றத்துறை அமைச்சர் டேவிட் கோலிமன் தெரிவித்துள்ளார்.

புதிய பிராந்திய விசாக்கள் மூலம் ஆஸ்திரேலியாவின் பிராந்திய பகுதியில் வசித்த ஒரு குடியேறி, மூன்றாண்டுகளுக்குப் பின்னர் நிரந்தர வதிவிட உரிமைக்கோரி விண்ணப்பிக்கலாம். "மூன்றாண்டுகளுக்கு பின்னர் குடியேறிகள் விண்ணப்பிக்கும் பொழுது, வங்கி விவரங்கள், கட்டண விவரங்கள், குடியிருப்பு விவரங்கள் வழியாக மூன்றாண்டுகள் பிராந்திய பகுதியில் வசித்ததை நிரூபிக்க வேண்டும்," எனக் கூறியுள்ளார் குடியேற்றத்துறை அமைச்சர் கோலிமன். அப்படி நிரூபிக்காத பட்சத்தில் அவர்களுக்கு நிரந்தர வதிவிடம் வழங்கப்படாது என்றும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் - முக்கிய கோரிக்கைகள் என்ன?

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் 2009ஆம் ஆண்டு மே மாதம் நிறைவடைந்த நேரத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த பலர் பாதுகாப்பு பிரிவினரிடம் சரணடைந்தனர்.இவ்வாறு சரணடைந்த ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளதாக வடக்கு கிழக்கு வாழ் தமிழர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த 10 வருடங்களில் தொடர்ச்சியாக சுழற்சி முறையிலான போராட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், இன்று வரை காணாமல் போனோர் தொடர்பான எந்தவித தகவல்களும் உறவினர்களுக்கு கிடைக்கவில்லை.

## காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் திறப்பு

இலங்கையில் காணாமல் போனோரை கண்டறிவதற்காக அரசாங்கத்தினால் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 2017ஆம் ஆண்டு திறக்கப்பட்டது.காணாமல் போனோரையும், காணாமல் ஆக்கப்பட்டோரையும் தேடி கண்டுபிடித்தல் மற்றும் அவர்கள் காணாமல் போனதற்கான சூழ்நிலையை கண்டறிதல் ஆகியன இந்த நிறுவனத்தின் நோக்கமாகும்.

இந்த நிலையில், குறித்த அலுவலகம் திறக்கப்பட்டு, வடக்கில் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், மாத்தறை பகுதியிலும் ஓர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.காணாமல் போனோரை கண்டறிவதற்கான பல முயற்சிகள் இந்த நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம்

இந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமக்கு நீதி கோரி கல்முனை, வவுனியா உள்ளிட்ட பல பகுதிகளில் ஆர்ப்பாட்ட பேரணிகளை முன்னெடுத்துள்ளனர்.

## குற்றவாளிகள் சட்டத்திற்கு முன்நிறுத்தப்பட வேண்டும்

இவ்வாறான நிலையில், அதி தீவிர அரசியல் நிலைப்பாட்டில் இருந்து கொண்டு இந்த பிரச்சனையை தீர்க்க முடியாது எனவும், ஜனநாயக ரீதியில் பேச்சுவார்த்தைகளின் ஊடாகவே இந்த

பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் காணாமல் போனோரை தேடி கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் தெரிவிக்கின்றார்.

காணாமல் போனோர் தொடர்பான உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்ற நோக்கத்தை கொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.மேலும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் தொடர்புடையவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களை சட்டத்திற்கு முன்நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## மகாராணியின் பாராளுமன்ற உரையில்



பிரித்தானிய பாராளுமன்றில் உரையாற்றிய மகாராணி ஐரோப்பிய ஒன்றியத்தைவிட்டு அக்டோபர் 31ம் திகதி வெளியேறுவதே அரசின் முன்னுரிமை என்று குறிப்பிட்டார்.

- பிசிசியின் புதிய தலைவராக சவுரவ் குங்குலி தெரிவாகியுள்ளார்.
- இந்திய அமைதிப்படை இலங்கையில் செய்தவை குறித்து கே.எஸ். அழகிரியுடன் நேருக்கு நேர் விவாதிக்க தயார் என்று சீமான் கூறியுள்ளார்.
- யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு புலம் சிதறியுள்ள ஐக்கிய ராச்சியம், சுவிஸ் நாடுகளைச் சேர்ந்தோர் CT ஸ்கானர் வழங்கியுள்ளனர்.
- விடுதலை புலிகளுடன் தொடர்புள்ளதாக மலேசியாவில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இன்∴.போசிஸ், டி.சி.எஸ், டாடா மோட்டார்ஸ்! மதிப்பு மிக்க நிறுவனங்களை பட்டியலிட்டது ∴.போர்ப்ஸ்

இந்தியாவின் முக்கிய தகவல் தொழில்நுட்ப நிறுவனமான இன்∴. போசிஸ், உலகின் 3-வது மதிப்புமிக்க நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக ∴.போர்ப்ஸ் ஒரு பட்டியல் வெளியிட்டிருக்கிறது. பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் இன்∴.போசிஸ் நிறுவனத்திற்கு இது கௌரவமாக கருதப்படுகிறது.

வர்த்தகம், தொழில்நுட்பம் சார்ந்து இயங்கும் சர்வதேச மீடியா நிறுவனமான ∴.போர்ப்ஸ், உலகின் மதிப்பு மிக்க நிறுவனங்களை தேர்வு செய்து பட்டியல் இட்டிருக்கிறது. உலக அளவில் முதல் இடத்தை விசா நிறுவனத்திற்கும், 2-வது இடத்தை ∴.பெராரி நிறுவனத்திற்கும் ∴.போர்ப்ஸ் வழங்கியிருக்கிறது. பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் இன்∴.போசிஸ் 3-வது மதிப்பு மிக்க நிறுவனமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரசித்தி பெற்ற ஆப்பிள், சீமென்ஸ், வால்ட் டிஸ்னி உள்ளிட்ட நிறுவனங்களை பின்னுக்கு தள்ளி, இந்த இடத்தை இன்∴.போசிஸ் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இன்∴.போசிஸ் பற்றிய அறிவிப்பை, 'ஆசிய படையெடுப்பு' என தலைப்பிட்டு செய்தி வெளியிட்டிருக்கிறது ∴.போர்ப்ஸ். இந்தப் பட்டியலில் இதர இந்திய நிறுவனங்களான டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ் (டிசிஎஸ்) 22-வது இடத்தையும், டாடா மோட்டார்ஸ் 31-வது இடத்தையும், டாடா ஸ்டீல் 105-வது இடத்தையும், லார்சன் டாப்ரோ 115-வது இடத்தையும், மஹிந்திரா அண்ட் மஹிந்திரா 117-வது இடத்தையும், ஹெச்.டி.எ∴.ப்.சி 135-வது இடத்தையும், பஜாஜ் ∴.பின்சர்வ் 143-வது இடத்தையும்,விப்ரோ ஸ்டுட் 168-வது இடத்தையும் பெற்றிருக்கின்றன.

Infosys®
Navigate your next

TATA

டாப் 10 இடத்தில் விசா, ∴பெராரி, இன்∴போசிஸ் ஆகியவற்றை தவிர்த்து நெட்∴பிளிக்ஸ், பேபால், மைக்ரோசா∴ப்ட், வால்ட் டிஸ்னி, டொயோட்டா மோட்டார்ஸ், மாஸ்டர் கார்ட், காஸ்ட்கோ வேல்சேல் நிறுவனங்கள் அணி வகுக்கின்றன. கடந்த முறை வால்ட் டிஸ்னி நிறுவனம் முதல் இடத்தைப் பிடித்தது. இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள முதல் 250 நிறுவனங்களில் 59 அமெரிக்காவை சேர்ந்தவை. அடுத்தபடியாக ஜப்பான், சீனா, இந்தியா ஆகிய நாடுகளை சேர்ந்த 82 நிறுவனங்கள் டாப் 250-ல் இடம் பிடித்துள்ளன.

நிறுவனங்களின் நம்பகத் தன்மை, நேர்மை, சமூக தொடர்பு, ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், உற்பத்தி பொருட்களின் தரம் உள்ளிட்ட அளவுகோல் அடிப்படையில் இந்தப் பட்டியல் வரிசைப்படுத்தப்பட்டிருப்பதாக ∴போர்ப்ஸ் கூறியிருக்கிறது.

உலக அளவில் 3-வது இடம் பெற்றிருக்கும் இன்∴போசிஸ் 1981-ல் நாராயண மூர்த்தியால் பெங்களூருவில் தொடங்கப்பட்டது. கடந்த நிதி ஆண்டில் இதன் வர்த்தகம் 11.6 பில்லியன் டாலர் ஆகும். கடந்த மார்ச் நிலவரப்படி இதன் ஊழியர்கள் எண்ணிக்கை 2 லட்சத்து 4ஆயிரத்து 107. வருவாய் அடிப்படையில் இந்தியாவில் 2-வது பெரிய மென்பொருள் ஏற்றுமதியாளராகவும் இன்∴போசிஸ் திகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

**39ம் பக்கம் தொடர்ச்சி... உலகின் சிறந்த கால்பந்து**

இத்தாலியில் உள்ள மிலன் நகரில் நடந்த கோலாகல விழாவில் மெஸ்சிக்கு விருது வழங்கப்பட்டது. பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடி வரும் 32 வயதான மெஸ்சி கடந்த சீசனில் சாம்பியன்ஸ் லீக் போட்டியில் அதிக கோல்கள் (12) அடித்து இருந்தார். அத்துடன் லா லிகா போட்டியிலும் 36 கோல்கள் அடித்து கோல்டன் ஷூவை பெற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டில் நடந்த பெண்கள் உலக கோப்பை கால்பந்து போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற அமெரிக்க அணிக்காக 6 கோல்கள் அடித்து வெற்றியில் முக்கிய பங்கு வகித்த மெகன் ராபின்னோ உலகின் சிறந்த வீராங்கனை விருதை தன்தாக்கினார். அமெரிக்க அணியின் பயிற்சியாளர் ஜில் எல்லிஸ் சிறந்த பெண் பயிற்சியாளராக தேர்வு செய்யப்பட்டார்.

# உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதை மெஸ்சி வென்றார்!

சர்வதேச கால்பந்து சங்கம் (பிபா) ஆண்டுதோறும் சிறந்த வீரர், வீராங்கனைகளை தேர்வு செய்து விருது வழங்கி கௌரவிக்கிறது. தேசிய அணிகளின் கேப்டன்கள், பயிற்சியாளர்கள் மற்றும் கால்பந்து பத்திரிகையாளர் பிரதிநிதிகள் ஆகியோர் வாக்களித்து விருதுக்கு உரியவர்களை தேர்வு செய்து வருகிறார்கள்.

இந்த ஆண்டுக்கான 'பிபா' விருதுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன. சிறந்த வீரருக்கான இறுதிப்பட்டியலில் லயோனல் மெஸ்சி (அர்ஜென்டினா), கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்ச்சுகல்), விர்ஜில் வான் டிஜிக் (நெதர்லாந்து) ஆகியோர் இடம் பெற்று இருந்தனர். கடந்த சீசனில் சாம்பியன்ஸ் லீக் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற லிவர்பூல் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக விளங்கியவரும், ஐரோப்பிய கால்பந்து சம்மேளனத்தின் சிறந்த வீரர் விருதை பெற்றவருமான விர்ஜில் வான் டிஜிக் இந்த ஆண்டு விருதுக்கு தேர்வு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் 46 வாக்குகள் பெற்ற அர்ஜென்டினா அணியின் நட்சத்திர நாயகன் மெஸ்சி, விர்ஜில் வான் டிஜிக் (38 வாக்குகள்), கிறிஸ்டியானோ ரொனால்டோ (36 வாக்குகள்) ஆகியோரை பின்னுக்கு தள்ளி சிறந்த வீரர் விருதை தட்டிச் சென்றார். 2016-ம் ஆண்டு முதல் ஷபிபா' சிறந்த வீரர் விருதை தனியாக வழங்க தொடங்கிய பிறகு மெஸ்சி முதல்முறையாக இந்த விருதை பெற்றுள்ளார். முன்பு பிரான்ஸ் கால்பந்து சங்கத்துடன் இணைந்து 'பிபா' இந்த விருதை வழங்கிய போது மெஸ்சி 5 முறை சிறந்த வீரர் விருதை பெற்று இருந்தார்.

இதன் தொடர்ச்சி 38ம் பக்கம் பார்க்க



# அல்கொய்தாவினருக்கு பாகிஸ்தான் பயிற்சி அளித்ததாக இம்ரான் கான் ஒப்புதல்!



அல்கொய்தா மற்றும் பிற தீவிரவாத குழுக்களுக்கு பாகிஸ்தான் பயிற்சி அளித்ததாக முதல்முறையாக அந்நாட்டின் பிரதமர் இம்ரான் கான் ஒப்புக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் வெளிநாட்டு உறவுகளுக்கான கவுன்சில் (Council on Foreign Relations (CFR) )எனும் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் இம்ரான் கான் பேசினார்.

அப்போது அவர், இரட்டை கோபுர தகர்ப்புக்கு பிறகு, அமெரிக்காவுடன் கைகோர்த்தது பாகிஸ்தான் செய்த மிகப்பெரிய தவறுகளில் ஒன்று என்றார்.அமெரிக்காவுடன் கைகோர்த்ததால் பாகிஸ்தானியர்கள் 70 ஆயிரம் பேர் உயிரிழந்து விட்டனர் என்று இம்ரான் கான் குறிப்பிட்டார். இந்த சூழ்நிலையில், ஆப்கனில் அமெரிக்கா வெற்றி பெறாததற்கு பாகிஸ்தான் மீது குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுவதாக இம்ரான் கான் குறிப்பிட்டார்.

ஆப்கனில் சோவியத் யூனியன் படைக்கு எதிராக சண்டையிட 1980ம் ஆண்டுகளில் பயிற்சி அளிக்கப்பட்ட குழுக்கள், பிறகு அமெரிக்காவால் தீவிரவாத குழுக்களாக முத்திரை குத்தப்பட்டு விட்டதாக அவர் கூறினார்.ஆப்கனில் சண்டையிட அல்கொய்தா மற்றும் பிற குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு பாகிஸ்தான் ராணுவமும், ஐஎஸ்ஐ உளவு அமைப்பும் பயிற்சி அளித்ததாகவும், ஆதலால் அவர்களிடையே தொடர்பு நிலவுகிறது என்றும் இம்ரான் கான் தெரிவித்தார்.

பாகிஸ்தானால் பயிற்சி அளிக்கப்பட்ட தீவிரவாதிகளுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்படுவதில், பாகிஸ்தானைச் சேர்ந்த அனைவருக்கும் உடன்பாடு கிடையாது என்றும், அதுதான் பாகிஸ்தானில் தீவிரவாத தாக்குதல்கள் நடப்பதற்கு காரணம் என்றும் இம்ரான்கான் குறிப்பிட்டார்.

# இங்கிலாந்தின் குடியேற்ற முறையில் மாற்றமா?

இங்கிலாந்தில் ஆஸ்திரேலியாவின் புள்ளிகள் அடிப்படையிலான குடியேற்ற முறையை நடைமுறைக்கு கொண்டு வர அரசு கடுமையாக உழைத்து வருவதாக இங்கிலாந்து உள்துறை செயலாளர் பிரீத்தி பட்டேல் தெரிவித்துள்ளார். திறன்வாய்ந்த வர்களுக்கான விசா விண்ணப்பங்களை ஆஸ்திரேலிய குடியேற்றத்துறை அதிகாரிகள் பரிசீலிக்கும் போது,ஆங்கிலப்புலமை, பணி அனுபவம், வயது' அடிப்படையில் புள்ளிகளை வழங்கி, அதை வைத்து விசா வழங்குகிறார்கள்.

இந்த அடிப்படையிலான விசா வழங்கும் முறையினையே தற்போது இங்கிலாந்தில் கொண்டு வரப்பட வேண்டும் எனச் சொல்கிறார் பட்டேல். இந்த முறை இங்கிலாந்துக்கு பொருந்துமா என்பதை பரிசீலிக்குமாறு கடந்த மாதம் புலம்பெயர்வு ஆலோசனைக் குழுவிடம் அவர் கேட்டிருக்கிறார். இக்குழு இது தொடர்பான அறிக்கையை வரும் ஜனவரி மாதம் வழங்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் குடியேற்ற கொள்கையை ஆராய்ந்து வரும் பேராசிரியர் அலெக்ஸ் ரெய்லி, புள்ளிகள் அடிப்படையிலான முறை ஆஸ்திரேலியாவில் வெற்றியடைந்தது போல இங்கிலாந்தில் நிகழும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை எனக் கூறியிருக்கிறார். ஐரோப்பிய யூனியனிலிருந்து இங்கிலாந்து வெளியேறும் சூழலில், இந்த நாட்டின் குடியேற்ற முறையை மாற்ற ஓர் அரிய வாய்ப்பு கிடைத்துள்ளதாகக் கூறுகிறார் இங்கிலாந்தின் உள்துறை செயலாளர் பிரீத்தி பட்டேல்.

திறன்வாய்ந்தவர்களுக்கான விசா வழங்குவதில் கனடா, நியூசிலாந்து போன்ற நாடுகளும் புள்ளிகள் அடிப்படையிலான முறையை பின்பற்றி வருகிறது. "இங்கிலாந்தில் குடியேற்றம் என்பது அரசியல் காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. ஆஸ்திரே லியாவின் புள்ளிகள் அடிப்படையிலான முறையை இங்கிலாந்து உண்மையாக பின்பற்றுவதற்கு குறைந்தளவு வாய்ப்பே உள்ளது," என்கிறார் சிட்னி பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான மேரி கிராக்.

# மோசடி மற்றும் ஊழல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கையளிப்பு!

2015 ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல், மோசடி தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) பிற்பகல் ஜனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து இந்த அறிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்னவின் தலைமையிலான இந்த விசேட ஆணைக்குழு கடந்த ஜனவரி 17 ஆம் திகதி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

குறித்த காலப்பகுதியினுள் அரச நிறுவனங்களில் இடம் பெற்றுள்ளதாகக் கருதப்படும் ஊழல் செயற்பாடுகள், மோசடிகள், குற்றவியல் ரீதியான நம்பிக்கை மோசடிகள், சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துதல், ஏமாற்றுதல் மற்றும் அதிகாரம் அல்லது தத்துவம், அரச வளங்கள் மற்றும் சிறப்புரிமைகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் சொல்லப்பட்ட குற்றங்கள் மற்றும் தவறான செயற்பாடுகளின் பெறுபேறாக அரச சொத்துக்களுக்கு, அரச வருமானத்துக்கு பாரியளவு நட்டம் அல்லது சேதத்தை ஏற்படுத்தியிருத்தல் தொடர்பாக அரசியல் பதவி வகித்த அல்லது தொடர்ந்தும் பதவி வகித்துக்கொண்டிருக்கும் ஆட்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் நியதிச் சபை உத்தியோகத்தர் களாகவும் பணியாற்றிய மற்றும் தொடர்ந்து சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஆட்களுக்கு எதிராகப் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகள், தகவல்கள் மற்றும் ஏனைய விடயங்களைக் கோருதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல் இந்த ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

குறிப்பிடப்பட்டுள்ள முறைப்பாடுகள், தகவல்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக துரிதமாக, பக்கச்சார்பற்ற, விரிவான புலனாய்வுகளையும் விசாரணைகளையும் நடத்துதல் இந்த ஆணைக்குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ அறிவிப்பு!

இலங்கை ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் இலங்கை ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால், அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட சஜித் பிரேமதாஸவிற்கு, கட்சியின் செயற்குழு ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க 2005ஆம் ஆண்டுஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் களமிறங்கிய பின்னர், இந்த கட்சி சார்பில் முதல் முறையாக ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவே களமிறங்குகின்றார்.2010 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி பொது வேட்பாளருக்கே ஆதரவை வழங்கியிருந்தது.

தற்போதைய அரசாங்கத்தில் வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சராக கடமையாற்றி வரும் சஜித் பிரேமதாஸ, இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வராவார்.

கட்சியின் வேட்பாளராக களமிறங்குவதற்கான அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு, கட்சியின் தலைமையுடன் சஜித் பிரேமதாஸ பெரும் மோதல்களில் ஈடுபட்டிருந்தார்.இந்த நிலையில், பல நிபந்தனைகளுக்கு மத்தியில் சஜித் பிரேமதாஸவிற்கு ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இணக்கம் தெரிவித்திருந்த போதிலும், சஜித் பிரேமதாஸ அந்த நிபந்தனைகளை பகிரங்கமாகவே நிராகரித்திருந்தார்.

## யார் இந்த சஜித்?

இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவிற்கும், ஏமா பிரேமதாஸவிற்கும் புதல்வராக 1967ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் தேதி சஜித் பிரேமதாஸ பிறந்தார்.



ஆரம்ப கல்வியை கொழும்பி லுள்ள பிரபல பாடசாலைகளில் தொடர்ந்த சஜித் பிரேமதாஸ, தனது மேல்நிலை கல்வியை லண்டனில் படித்தார்.சஜித் பிரேமதாஸ, ஜலனி பிரேமதாஸவை திருமணம் செய் துள்ளார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் 2001ஆம் ஆண்டு களமிறங்கிய சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பெற்றுக்கொண்டார்.அதனைத் தொடர்ந்து, 2001முதல் 2004ம் ஆண்டு வரை ஆட்சியிலிருந்து அரசாங்கத்தில் சுகாதார பிரதி அமைச்சராக பதவி வகித்தார்.ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக சஜித் பிரேமதாஸ, 2014ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் 2015ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறிய ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் சஜித் பிரேமதாஸ, வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சராக கடமையாற்றி வருகின்றார்.ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக கடமையாற்றி வரும் சஜித் பிரேமதாஸ, எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் தேதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் களமிறங்குவதற்கு அந்த கட்சியின் செயற்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

47ம் பக்கம் தொடர்ச்சி... **இலங்கையில் தமிழரோ,**

என்ற கேள்வி எழுகிறது. இந்த விடயம் தொடர்பில் தமிழர்களோ அல்லது முஸ்லிம்களோ நாட்டின் ஜனாதிபதியாக முடியாது என இலங்கை அரசியலமைப்பின் எந்தவொரு பகுதியிலும் குறிப்பிடப்படவில்லை என அரச சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் யூ.ஆர்.டி.சில்வா சுட்டிக் காட்டினார். தமிழர்களோ அல்லது முஸ்லிம்களோ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியும் எனக் கூறிய அவர், போட்டியிடுவோருக்கு மக்கள் வாக்களிக்கும் பட்சத்தில் நிச்சயம் ஜனாதிபதியாக சிறுபான்மையினர் வரமுடியும் எனவும் கூறினார்.

# நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இலண்டன் தமிழினி பத்திரிகை நிறுவனத்தால் நடாத்தப்பட்ட

# சமய அறிவுப் போட்டி 2019 முடிவுகள்

முதற்பரிசு : செல்வி கலைச்சந்திரன் டிலோசினி

இரண்டாம் பரிசு : செல்வி மவிஷ்கா சுகந்தன்

மூன்றாம் பரிசு : செல்வி கௌசிகா குணபாலன்

## ஆறுதல் பரிசுகள்

செல்வன் வரதராஜா கிருஷ்ணராஜ்
செல்வி தர்மகுலசிங்கம் மாதங்கி
செல்வி நக்ஷத்திரா சுகந்தன்
செல்வன் சூரியகாந்தன் கஜேந்திரன்
செல்வன் சிறீதரன் ஆர்த்தியான்
திருமதி சிவசக்தி சிறீதரன்
செல்வன் கலைச்சந்திரன் சுதர்சன்
செல்வி ஜில்ருக்ஷி செல்வராசா
செல்வி ஸ்ரீ முருகன் ஹஜினா
செல்வி ஜயபாரதி தில்லையம்பலம்
திருமதி புவனேஸ்வரி தில்லையம்பலம்
செல்வன் கஜேந்திரன் சியிராஜ்
செல்வி சுகுந்தன் லதுஷனா
செல்வன் சுதாகர் டுசாந்
செல்வன் அனுஷன் நிதுஷன்
செல்வி சுகுந்தன் லக்ஷனா
செல்வி சௌமியா சூரியகாந்தன்
செல்வன் சுகுந்தன் கேஷிகன்
செல்வி டக்சிகா சிவானந்தராஜா
செல்வன் செல்வராசா யுகதீபன்
திருமதி சாந்தினி ஜெயசிங்கம்
திருமதி மங்களேஸ்வரி நரேந்திரராஜா
செல்வி ரிசானி திருச்செல்வம்
செல்வி சந்திரசிறி பிரியங்கா
செல்வி வளர்நிலா செந்தில்நாதன்

பரிசு பெற்றவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.
பரிசளிப்பு விழா பற்றிய அறிவித்தல் பின்பு
அறியத்தரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தமிழினி பத்திரிகை நிறுவனம்.**

# திமுக.விடம் ரூ10 கோடி தேர்தல் நிதி பெற்ற விவகாரம்!

திமுக.விடம் ரூ10 கோடி தேர்தல் நிதிபெற்றதாக எழுந்த விவகாரம் குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விளக்கம் அளித்திருக்கிறது. அதில் திமுக.விடம் நிதி பெற்றதை நேரடியாக ஒப்புக்கொள்ளவோ, மறுக்கவோ இல்லை.

2019 நாடாளுமன்றத் தேர்தல் செலவுக்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ரூ10 கோடியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ரூ 15 கோடியும், கொங்குநாடு தேசிய மக்கள் கட்சிக்கு ரூ15 கோடியும் வழங்கியதாக தேர்தல் ஆணையத்தில் திமுககணக்கு சமர்ப்பித்தது.

இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு விடுத்துள்ள அறிக்கையில்- மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் நிதி மற்றும் செலவுகள் குறித்து சிலஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இது, கட்சியின் மாண்பினை குலைக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட பொய்யான விவரங்களேயன்றி வேறல்ல.

ஊடகச் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு மாறாக, மக்களவைத் தேர்தல் சமயத்தில் கட்சியால் பெறப்பட்ட அனைத்து நன்கொடைகள் மற்றும் நிதிவிவரங்கள் குறித்து இந்திய தேர்தல் ஆணையத்திற் குசமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் கணக்கு அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. இது, தமிழகம் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பெறப்பட்ட நன்கொடைகள் மற்றும் பங்களிப்புகளை உள்ளடக்கியதாகும். இதில், ஊடகச்செய்திகளில் தவறாக குற்றம் சாட்டப்பட்டிருப்பதைப்போல மறைப்பதற்கு ஏதும் இல்லை.

இரண்டாவதாக, தேர்தல் ஆணையத்திற்கு அளிக்கப்பட்டுள்ள கணக்குகள் குறித்த அறிக்கையானது, தேர்தலின்போது கட்சியால் செய்யப்பட்ட அனைத்து செலவினங்களையும் பற்றிய விவரங்களை கொண்டிருக்கிறது. இந்நிலையில், ஊடகச்செய்திகளில் கட்சி செலவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ள 'தொகை' என்பது முற்றிலும் திரித்துக் கூறப்பட்ட ஒன்றாகும்.

இந்த அனைத்து விபரங்களையும் இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் தேர்தல்கணக்குகள் குறித்த அறிக்கை வெளியிடப்படும்போது சரிபார்த்துக் கொள்ளலாம். இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு கூறியுள்ளது.

## இலங்கையில் தமிழரோ, முஸ்லிமோ ஜனாதிபதியாக முடியுமா? தமிழர்கள், முஸ்லிம்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட வரலாறு!

பௌத்தர்கள் தவிர்த்த ஏனையோர் ஜனாதிபதியாக முடியாது என்ற கருத்து சமூகத்தில் அதிக அளவில் பேசப்படுகிற நிலையில், கடந்த ஜனாதிபதி தேர்தல்களின்போது தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் போட்டியிட்ட வரலாறு இருக்கிறது.

இலங்கையில் 1982ஆம் ஆண்டு, நாட்டின் முதலாவது ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்ட நாள் முதல் தமிழர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டதற்கான தகவல்கள் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு ஆவணங்களில் உள்ளன. 1982ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 6 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் சைக்கிள் சின்னத்தில் தமிழரான ஜீ.ஜீ. பொன்னம்பலம் போட்டியிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து, 1988 மற்றும் 1994ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் எந்தவொரு தமிழ் மற்றும் முஸ்லிம் வேட்பாளர்களும் களமிறங்கவில்லை. எனினும், 1999ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இலங்கை முஸ்லிம் கட்சி சார்பில் அப்துல்ரசூல், தராசு சின்னத்தில் போட்டியிட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு தமிழ் வேட்பாளரோ அல்லது முஸ்லிம் வேட்பாளரோ போட்டியிடவில்லை. எனினும், 2010ல் நடைபெற்ற தேர்தலில் இரண்டு முஸ்லிம் வேட்பாளர்களும் ஒரு தமிழ் வேட்பாளரும் போட்டியிட்டனர். இதன்படி, மொஹமத்காசிம் மொஹமத் இஸ்மயில், எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் மொஹமத் முஸ்தபா ஆகியோர் போட்டியிட்டிருந்தனர். 2015ஆம் ஆண்டு மொஹமட் இலியாஸ், இப்றயிம்மிப்லார் மற்றும் சுந்தரம் மகேந்திரன் ஆகியோர் போட்டியிட்டனர். இலங்கையில் 7 தடவைகள் நடைபெற்றுள்ள ஜனாதிபதி தேர்தலில் 8 தமிழ் மற்றும் முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ள போதிலும், அவர்கள் குறிப்பிடத்தக்க அளவு வாக்குகளை பெற்றிருக்கவில்லை.

பௌத்தர்கள் தவிர்த்த ஏனையோர் ஜனாதிபதியாக முடியாது என்றால், தேர்தல்கள் திணைக்களம் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஏன் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது

இதன் தொடர்ச்சி 44ம் பக்கம் பார்க்க

# ஆசிரியரின் பார்வையில்



## பொறியில் சிக்குவாரா போரிஸ்



பிரித்தானிய பிரதமரை அக்டோபர் 31ல் பிரிவெளி யேற்றத்தை தடைசெய்ய அவரது கட்சியினரே காலை வாரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## இலங்கையில் நடப்பது என்ன?

இலங்கையில் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுகள் நடந்து முடிந்துவிட்டன. தமிழர் கூட்டமைப்பு மதில்மேல் பூனையாக கண்களை மூடிக்கொண்டு செயல்படுகின்றது. நீராவியடி இந்து ஆலயத்தில் நடைபெற்ற அத்துமீறல்களுக்கு பிரதான அரசியல் கட்சிகளோ அல்லது அதன் வேட்பாளர்களோ இன்னமும் வாய் திறக்கவில்லை?

## மோதாமல் விளையாடும் பிரதமர் மோதி

சீனத் தலைவரை அழைத்து உபசரித்து இரு நாடு களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடு பட்டிருப்பது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.



## கத்திக் குத்து தொடரும் பிரித்தானியா



சம்பந்த சம்பந்த மில்லாமல் இளைஞர்கள் யுவதிகள் பிரித்தானியாவில் தொடர்ந்து கத்திக் குத்தால் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். குறிப்பிடப்பட்ட அக்டோபர் 12 வரை 116 பேர் கொலை செய்யப்பட்டனர்.

# வட மாகாணத்திலிருந்து வெளிவரவுள்ள முதல் மாலைத் தினசரி

## தமிழினி

# மாலை நிலா

## ஜனவரி முதல் வெளிவருகின்றது.

**உதவி ஆசிரியர்கள், நிருபர்கள், செய்தியாளர், விளம்பரம் சேகரிப்போர், ஒப்பு நோக்காளர், பதிப்பகங்கள், பத்திரிகை விநியோகிஸ்தர்.**

## விற்பனையாளர்கள் தேவை

### திரு. பிரியராம் சிவம்

**போக்காலை வீதி, உடுப்பிட்டி**
**தமிழினி பதிப்பகம் - மாலை நிலா**


### பிழை திருத்தம்

சென்ற தமிழினி இதழின் பின்புற உள்பக்க அட்டை செய்தியில் திரு. இரத்தினதுரையின் "மகன்" என்பதற்குப் பதிலாக மகள் என்று அச்சிடப்பட்டுள்ளது. மகனின் பெயர் "சுபோதன்" ஆகும். தவறுக்கு வருந்துகிறோம்.

# காலிமுகத் திடலில் சஜித் பிரேமதாசாவின் கூட்டத்தில் அலைகடலென திரண்ட மக்கள் கூட்டம்



தமிழினி தகவல் களஞ்சியம், புரட்டாதி மாத இதழ் 15.10.2019 திருமதி சரோஜினிதேவி குலேந்திரன் அவர்களால் அச்சடிக்கப்பட்டு இலவசமாக லண்டனில் விநியோகிக்கப்படுகின்றது. ஆசிரியர் திரு வ.மா. குலேந்திரன், இணை ஆசிரியர் திரு பிரியராம் சிவம்.
மின்னஞ்சல்: vkevents2019@yahoo.com